# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஆகஸ்ட் 2007 ஜீவியம் 13 மலர் 4

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| உலகம்-மோட்சம்-ஸ்ரீ அரவிந்தம் | 3 |
| லைப் டிவைன் | 26 |
| வல்லுநரை விஞ்சும் அரசியல்வாதி | 32 |
| அன்பர் கடிதம் | 35 |
| ஆன்மீகம் மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 37 |
| சாவித்ரி | 41 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 43 |
| மலரும் மணமும் | 47 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 52 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

### ஜீவியத்தின் ஓசை

✡ நிலையான முழுப்பலனை ஒரு நொடியில் அன்னையிடமிருந்து பெற முடியும். தூய்மையான உண்மைக்கு அது பலிக்கும்.

✡ புறக்கட்டுப்பாடு வாழ்வு.

சுயக்கட்டுப்பாடு அன்னை வாழ்வு.

இராசி என்பது இறைவனின் அம்சம்.

## இம்மாதச் செய்தி

**பிறர் குறையில்**

**தன் குறையைக்**

**காண்பதே மனநிறைவு.**



# உலகம்–மோட்சம்–ஸ்ரீ அரவிந்தம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## முடிவுரை

*The Life Divine* இல் உள்ள முக்கிய கருத்துகளை பகவான் கூறும் புதிய முக்கிய அம்சம் புலப்படும்படி இதுவரை கட்டுரையை எழுதினேன். வாசகர்கள் அன்பர்கள். அன்னையைப் பற்றி அமுதசுரபி, அன்னை தரிசனம் மூலமாகக் கேள்விப்பட்டவர்கள் அன்பர்களானார்கள். தமிழ் மக்கள் அன்னயை அறிந்தனர். அறிந்தவர் ஏற்றனர். அதன் பலன்,

- இதுவரை பலிக்காத பிரார்த்தனை பலித்தது.
- அன்னை ஜீவியம் சூழலாக அவர் வாழ்வைத் தழுவியது.

அன்னையை அறிவது ஆயிரம் கட்டங்கள், குறைந்தபட்சம் நூறு எனலாம். இது அவற்றுள் முதற் கட்டம். அடுத்த கட்டம் வர மனம் மாற வேண்டும் என்று அறிபவர் மனம் மாற முடியாமல் தவிக்கின்றனர். தாமுள்ள நிலையில் அன்னையை ஏற்றது முதலில் எனில், நம் நிலையை அன்னைக்கேற்றவாறு மாற்றி அன்னையை ஏற்பது அடுத்தது. இது இரண்டாம் நிலை. அதனால் மனித வாழ்வு எல்லையைக் கடந்து தெய்வீக வாழ்வாக மாறும்நிலை ஏற்பட்டது. முடிவு மிக உயர்ந்தது, தெய்வங்களைக் கடந்தது. அதை 100ஆம் நிலை எனலாம். அன்னையின் வரலாறு, கோட்பாடுகளை அறிந்தவர், அவர் வாழ்வில் பரிச்சயமுள்ளவர் இக் கட்டுரையைப் படித்து, ஊன்றிப் படிப்பதால் புரிவதாகக் கருதினால், மனமாற்றம் ஏற்பட்டால் பெரும்பலனைப் பெறுவர். அப்பெரும்பலன் உள்ள நிலைகள் பல.

1) சத்தியஜீவியத்தில் அது ascent ஆக அல்லது ஆரம்ப descent ஆகத் தெரியும். Ascent என்பது சத்தியஜீவியத்தை எட்டித் தொடுவது. Descent என்பது தொட்டபின் சத்தியஜீவியம் அதனிடத்திலிருந்து நகர்ந்து நம்மை நோக்கி வருவது. இதை நாம் யோகசித்தியாகப் புரிந்துகொள்ளக்கூடாது. நாம்

இன்றுள்ள நிலைக்குரிய சத்தியஜீவிய அம்சமாக அறிய வேண்டும். எந்த நிலையிலும் எல்லா நிலைகளும் ஓரளவு உண்டு என்பது தத்துவம். உதாரணமாக கல் ஜடம். அதற்கு அறிவில்லைஎன நாம் அறிவோம். தத்துவரீதியாக கல்லுக்கும் அறிவுண்டு. ஒரு சிறுவன் விஷமமாக ஆற்றங்கரையில் நாம் உட்கார்ந்திருக்கும் பொழுது ஒரு கல்லை எடுத்து பின்புறமாக நம் முதுகை நோக்கி அடித்தால் அக்கல் அவன் கைதவறி நம்மீது படவில்லை என்றால், 1 வாரம் முன் நாம் அதே இடத்தில் அதே கல்லை எடுத்து அன்புடன் விளையாடியதால் அக்கல் நன்றியறிதலால் நம் மீது பட மறுக்கிறதுஎன்பது தத்துவ விளக்கம். கல்லுக்கும் அறிவுண்டு. அது இப்படிச் செயல்படு–கிறது. அதேபோல் சத்தியஜீவியம் நாமுள்ள நிலையில் இதுபோல் செயல்படுகிறதுஎன அறிய வேண்டும். இதன் முக்கிய vibration சுபாவம் சுமுகம்.

- படிப்பதால் சத்தியஜீவிய சுமுகம் நம்முள் சிறப்பாகச் செயல்படும். பரம எதிரியானவர் சிரித்த முகமாகப் பேசுவார். இச் சுமுகம் ஓரளவு தெரியும்.

2) சத்தியஜீவியத்திற்கு அடுத்தது தெய்வீக மனம் (Overmind). இது கடவுள்கள் வாழும் லோகம். இந்த லோகத்திற்கு ஞானம் உண்டு. அத்துடன் உறையும் அஞ்ஞானமும் ஓரளவுண்டு. இருந்தாலும் அஞ்ஞானத்தால் சிரமமில்லாமல் ஞானம் செயல்படும் திறன் உண்டு. இக்கட்டுரையைப் படிப்பதால் தெய்வீக மனத்தின் திறனும் நமக்குச் சிறிதளவு வரும். நடைமுறையில் நமக்குத் தொடர்ந்து தொந்தரவு செய்யும் உறவினர், உடன் வேலை செய்பவர் நமக்கு வந்த இத்திறனால் அவர்கள் தொந்தரவு பலிக்கவில்லைஎனக் காண்பர்.

3) அடுத்த நிலை யோகியின் மனம். இது நேரடியாக விஷயத்தை அறியவல்லது. ஐன்ஸ்டீன், பெர்னாட்ஷா, ராமானுஜம் இந்நிலையைச் சேர்ந்தவர்கள். *The Life Divine* சாரத்தை இக்கட்டுரை தருவதால், intuition நேரடி ஞானமும் நமக்கு மின்னல்போல் தோன்றும். M.A. படித்து 8 வருஷம் வேலையில்லாமல் இப்பொழுது ரூ.4000/–த்திற்கு வேலை செய்பவர் இதைப் படித்தால் intuitive mind யோகியின் மனம் செயல்பட்டு அவர் மனத்தில் intuition மின்னலாகத் தோன்றும். அவர் மனம் வேலையிலிருப்பதால் அவருக்குத் தகுந்த வேலை அமெரிக்காவில் மாதச் சம்பளம் ரூபாய் 1 லட்சத்திற்கு காத்திருப்பது சூழல் மூலம் அவர் கண்ணில் பட்டு வேலை பெற்று அமெரிக்கா செல்வார்.



4) அடுத்தது ஞானதிருஷ்டியுள்ள ரிஷி மனம். இக்கட்டுரையைப் படிப்பவருக்கு ஞான திருஷ்டி ஆன்மீகமாக இருக்காது. IAS பரீட்சை 1962இல் எழுதியவர் கண்முன் 8 கேள்விகள் தோன்றின. அவை இரண்டு நாள் கழித்து பரீட்சையில் வந்தன. அதன் சூட்சுமமறிந்து அவர் தயாரானதால் IAS இல் அந்த பேப்பரில் முதலாக வந்தார்.

5) முனிவர் மனம் மௌனம் நிறைந்தது அடுத்த நிலை. பல நாள் யோசனை செய்து புரியாததை யோசனையில்லாமல் – மௌனத்தில் – இப்பொழுது புரியும்.

6) மனித மனம், கட்டுரை முகத்தைப் பிரகாசமாக்கும். அறிவு தீட்சண்யம் பெற்றது தெரியும்.

7) உயிர் அடுத்தது. உடல் முடிவானது. உயிர் சந்தோஷமாக இருக்கும். உடலில் உள்ள வியாதி போய், ஆரோக்கியம் பெருகும்.

இவை பெரிய பேறுகள் என்றாலும் மனதைத் தொடா. ஸ்ரீ அரவிந்தத்தின் மகிமையை நம் மனத்திற்கு உணர்த்தா. அது பிரமோஷன், எலக்ஷன் வெற்றி, சொத்து, பணம், பரிசு, பதவி இவற்றில் வெளிப்பட்டால்தான் தெரியும். *The Life Divine* பகவானுடைய Magnum Opus, பெரு நூல். அதன் சாரம் மனதில் பதிவதால் செல்வம் பெருகும். அது அனைவருக்கும் புரியும். செல்வம் என்பது மனத்தின் திறமை. குணத்தின் சிறப்பு. இந்நூலில் 30 பெரிய சிக்கல்களும் 770 பெரிய கருத்துகளும் மொத்தமாக 1452 இதர இனிய கருத்துகளும் உண்டு. அவற்றுள் முக்கியமானவை அறிவுக்குப் புரியுமாறு கட்டுரையில் எழுதப்பட்டுள்ளதால் அது புரிந்தால் குணத்தில் அக்குறை நீங்கி முடிச்சு அவிழும். அதனால் செல்வம் பெருகும். அதன் அளவுக்குக் குறைந்த பட்சம், அதிகபட்சம் உண்டு. அமெரிக்காவிலும் இன்று 1 மில்லியன் டாலர் பணம் பெரியது. அது குறைந்தபட்சம். அதிகபட்சம் 100 மடங்கு. இந்நூல் இக் கட்டுரையால் புரியும். கட்டுரையை நிதானமாகப் படித்து மனம் சிறந்தால் 1 முதல் 100 வரை எந்தக் கட்டத்திலும் இச்செல்வம்

பலிக்கும். எந்த அளவு பலிக்கும் என்பது படிப்பவர் Personality பர்சனாலிட்டியைப் பொருத்தது. பொதுவாக இந்நூல் போன்ற நூல்களை Scriptures படிப்பவர் சத்தியசீலர்களாகவும், நல்ல மனமுடையவர்களா–கவுமிருப்பார்கள். நிபந்தனை என்றால் அவையிரண்டுமே நிபந்தனைகள்.

- சொல், எண்ணம், உணர்ச்சி, செயல், ஜீவியம் தூய்மையான சத்தியத்தால் மட்டுமே நிறைந்திருக்க வேண்டும். எளிய பாஷையில் ஒரு பொய் சொல்லக் கூடாது.
- சொல், எண்ணம், உணர்ச்சி, செயல், ஜீவியம் Goodness நல்லெண்ணத்தால் மட்டும் நிரம்ப வேண்டும். கெட்ட எண்ணம் அறவே கூடாது.

என் கட்டுரைகளில் போர் முதலியார், வால்டர் என்ற அமெரிக்கர், 12,000 மார்க்கட் விலையுள்ள நிலத்தை 27,000 ரூபாய்க்கு 10 வருஷமாக விற்க முடியாமல் 81,000க்கு விற்றவர் நிகழ்ச்சிகளை நான் பலமுறை குறிப்பிட்டுள்ளேன். 30 ஆண்டு வருமானம் முதலியாருக்கு ஒரு ஆண்டில் வந்தது. பெற்றுக் கொடுத்த அன்பரை தூஷித்துப் பேசினார் முதலியார். 1 கோடி வியாபாரம் 800 கோடியான பொழுது வால்டர் காணிக்கை கொடுக்க மறுத்தார். 81,000 ரூபாய்க்கு நிலத்தை விற்றவர் உதவிய அன்பர் மனம் நோகப் பேசினார். இவை மனிதச் சுபாவம். உதவியவருக்கு உபத்திரவம் செய்வது. இந்தச் சுபாவம் அந்த அருளைத் தடுக்கும். நன்றியறிதல் பொருத்தமான பரிகாரம். இம்மூவரும் அன்பர்களில்லை. பக்தியுள்ள குருக்கள் மகள்கள் திருமணம் ஆச்சரியமாக நிறைவேறியது. லாட்டரி பரிசைக் கையால் தொட மாட்டேன் என்ற சாஸ்திரி போன்றவர் மனம் தூய்மையானது. அப்படிப்பட்டவருக்கு உடனே பலிக்கும்.

ஆன்மீகம், சத்தியஜீவியம், சரணாகதி, திருவுருமாற்றம் ஆகியவை உயர்ந்த இலட்சியச் சிகரங்கள். இது போன்ற உன்னத குறிக்கோள்களை பணம், செல்வம் போன்ற லௌகீக முறைகளால் அடைய முயல்வது அறிவுக்குப் பொருந்துமா என்பது கேள்வி. இவை உன்னதமான யோக லட்சியங்கள். செல்வம் யோக வாழ்வில் யோக இலட்சியம். உலகம் புறக்கணிப்பது செல்வமில்லை. செல்வம் மகாலட்சுமி. உலகம் செல்வத்தைப் புறக்கணிக்கவில்லை. உலகம் புறக்கணிப்பது தவறான முறையில் பெற்ற செல்வம். துறவி செல்வத்தைப்



புறக்கணிக்கிறான். நமது இலட்சியம் துறவறமன்று, மோட்சமன்று. மோட்சம்பெற செல்வம் புறக்கணிக்கப்பட வேண்டுமா என்ற கேள்வியை நான் எழுப்பவில்லை. வேண்டாம் என்பது உண்மை. சத்திய ஜீவியத்தையடைய செல்வம் இன்றியமையாத கருவிஎன்பது பகவான் வாக்கு.

- செல்வம் ஆன்மீகமயமானது.
- தவறு செல்வத்திலில்லை.
- செல்வத்தை ஈட்டும் மனம் தவறாக இருக்கலாம். அது தவறு.
- நல்ல முறையில் ஈட்டிய செல்வம் ஆன்மீக இலட்சியத்தைப் பூர்த்தி செய்யும் கருவி.

மேற்கூறிய காரணங்களால் பலன் பணமாக வரும்என நான் கூறினேன். இது அனைவருக்கும் புரியும் பாஷை என்பதால் நான் அதை மேற்கொண்டேன்.

1920இல் எழுதி முடித்த *The Life Divine* 1940 இல்தான் முதலில் புத்தகமாக வெளிவந்தது. பகவானுடைய கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் அன்னை இரு எண்ணங்களைக் கைக்கொண்டார். அவையிரண்டும் நேர்எதிரானவை. இக்கொள்கைகள் பரப்பக் கூடியவையன்று. அடுத்தது இவற்றைத் தெளிவாக எடுத்துக் கூறுவது நல்லது. அர்த்தமற்றவர் பலர் செய்த முயற்சிகளை அன்னை விரும்பவில்லை. பல ஆண்டுகளாக சத்பிரேம் என்பவரை *The Adventure of Consciousness* என்ற நூலை எழுதத் தூண்டினார். பல ஆயிரக்கணக்கான மேல்நாட்டார் ஆசிரமம்வர உதவிய நூல் அது. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரணானவை. செய்பவரின் நோக்கம் முக்கியமானது. ஆதரவு சேர்க்க விரும்புவது நல்ல நோக்கமன்று. அது பிரச்சாரத்திற்குரியது என்பதால் தவிர்க்கப்பட வேண்டியது. கடுமையான கருத்துகளை எளிமையாக எடுத்துக் கூறும் அவசியத்தை அன்னை உணர்ந்து மேற்கூறிய நூலை எழுதத் தூண்டினார்.

- சிக்கலான கருத்தை, சிக்கலின்றிக் கூறுவது நல்ல முயற்சி.
- ஆர்வமுள்ள இதயங்களை அணுகும் எண்ணம் உயர்ந்தது.

இவ்விரு நோக்கங்களும் பூர்த்தியாகும் வகையில் எழுதப்பட்ட

கட்டுரை என்பதால், இக் கட்டுரை அன்னையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் என நினைக்கிறேன்.

நாம் காலத்தில் வாழ்கிறோம். ரிஷி காலத்தைக் கடந்து வாழ்கிறார். சத்தியஜீவிய வாழ்வு இவையிரண்டும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. இன்று அது உலகிலில்லை. உலகிலில்லாத ஒரு லோகத்தை உலகிலுள்ள மக்களுக்கு உணர்த்தும் எழுத்து உண்டா? அப்படி ஒரு எழுத்திருந்தால், அது *The Life Divine*ஐ விளக்கும். *The Life Divine* அப்படி எழுதப்பட்டது. இறைவனின் லீலை இப்புதிய லோகத்தி– லிருப்பதாலும், அதற்குரிய கருவி மனிதனிடம் இல்லை என்பதாலும் ரிஷிகள் Process of Creation சிருஷ்டி ஏற்பட்ட வகையை அறிய முடியவில்லை. பகவான் 1910இல் அந்த லோகத்தை நாராயண தரிசனமாகக் கண்டார். 1950 இல் உடலை விட்டு நீங்கி சூட்சும லோகத்தில் செய்த தவப்பயனால் 1956 இல் அந்த லோகத்தை பூமிக்குக் கொண்டு வந்தார். அதனால் சிறிதளவு நம் முயற்சி பலன் தரும் என்று நான் இக் கட்டுரையை 'உலகம் – மோட்சம் – ஸ்ரீ அரவிந்தம்' எழுத முற்பட்டேன். இதன் சாரம்

### • அவனே ஆட்டம், அவனே ஆடுபவன், அவனே அரங்கம்

என்பது. இக்கருத்தை சிறிதளவாவது நாம் நம் அனுபவத்தில் காண முடியுமா? அப்படிக் கண்டால் எழுத்தால் விளக்க முடியுமா? வரலாறு, இலக்கியம் நமக்குத் துணை செய்யுமா? என்று கருதிய பொழுது தோன்றியவற்றை இக் கட்டுரை கூறுகின்றது.

ஒரு மனிதன் ஒரு குடும்பத்தை ஸ்தாபிக்கிறான். கம்பனி, பள்ளி, கல்லூரி போன்ற ஸ்தாபனத்தை நிறுவுகிறான். அந்த ஸ்தாபனத்திற்கு அவனே சிருஷ்டிகர்த்தா. அந்த ஸ்தாபனம் அவனுடைய அரங்கம். அது செயல்படுவது அவன் செயல் எனினும் அதுவும் அவனே. அவனே ஸ்தாபன நிர்வாகம், அவனே அதை நிறுவியவன், அவனே அந்த ஸ்தாபனம் என்பது ஓரளவு இக்கொள்கைகளை விளக்கும். இக்கருத்தை மனம் அறியும், உயிர் உணரும், உடல் செயல்படுத்தும். சிறிதளவு உணர முடிந்தாலும், மயிரிழை செயல்படுத்த முடிந்தாலும் இந்த ஞானம் நம் வாழ்விலிருந்து அஞ்ஞானத்தை அகற்றும். அதாவது தோல்வி குறையும். குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை இதைச் செயல்படுத்த முடிந்தால் அச்சோதனை



வாழ்விலிருந்து இச்சக்தி தோல்வியை விலக்கவல்லதுஎனக் காட்டும். காலை நேரங்களில் செல்போனில் நம்பர் கிடைக்க 5 அல்லது 6 முறை அல்லது 10 முறை முயல வேண்டும். ஒரு குறிப்பிட்ட நெம்பர் தேவை எனில் அந்த நம்பரைக் கூப்பிடுமுன் மேற்கூறிய தத்துவத்தை இச்செயலில் உணர முயன்றால், அதாவது அதை நினைத்து நெம்பரைக் கூப்பிட்டால் நம்பர் கிடைப்பதைக் காணலாம். சிறிய செயலுக்கும் பெரிய செயலுக்கும் இச்சக்தியைப் பொருத்தவரை வித்தியாசமில்லை. டெலிபோனுக்கு அடுத்த கட்டிட நம்பருக்கும், அடுத்த நாட்டு நம்பருக்கும் வித்தியாசமில்லையல்லவா? அதுபோல் பெரிய காரியம் இதற்குப் பெரியதன்று. அதையும் சோதனை செய்து பார்க்கலாம். எந்தச் சோதனை செய்தாலும் ஒரு முறைக்கு மேல் செய்யக் கூடாது. எலக்ஷனில் MLA, MP பதவிகட்கு நிற்பவர் "நானே எலக்ஷன், நானே இப்பதவி, நானே இவற்றை உற்பத்தி செய்தவன்" என்று பிரம்ம ஞானத்தை அறிவாலும், உணர்வாலும், செயலாலும் ஓரளவு அனுபவிக்க முடியுமானால் அவர் வெற்றி பெறுவது உறுதி. இந்த எண்ணம் பொதுவாக மேலிட்டபடி ஒருவர் தம் வாழ்வை அமைத்துக் கொண்டால் சூழலினின்று தோல்வி அகலும், வெற்றி நிலைபெறும்.

வேதம் ஞான காண்டம், கர்ம காண்டங்களையுடையது. ஞானமும், கர்மமும் பிரிந்தன. ஞானத்தை ரிஷியும், கர்மத்தை சாஸ்திரியும் ஏற்றனர். ஐக்கியம் சக்தி வாய்ந்தது. பிரிவினை பலஹீனமானது. இப்பலவீனம் சாஸ்திரிகளை ஏழ்மைக்கு உட்படுத்தியது. அதனால் "ஏழைப் பிராம– ணன்" என்ற பதம் உயிர் பெற்றது. ஏழ்மையை மீறி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அந்தணர் கர்மகாண்டப் பயிற்சியைக் கைவிட மறுத்தனர். இது இமாலய உறுதி. இது இந்திய நாட்டு ஆன்மீகம் பெற்ற கிரீடம். ஞானமும், கர்மமும் இணைவது ஸ்ரீ அரவிந்தம். அங்கு ஏழ்மையோ, தோல்வியோ இல்லை. பகவானுடைய தத்துவங்களில் தலைகீழ் மாற்றம் பெரியது. ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டம் போகும் பொழுது செயல் மாறும். அதுவும் தலைகீழ் மாறும். அம்மாற்றம் பெரிய சக்தியை மனிதனுக்கு அளிக்கும். விவசாயம், பாக்டரி உற்பத்தி, வியாபாரம், நகரவாழ்வு, பணம், கல்வி ஆகியவற்றில் நாம் அம்மாற்றங்களைக் காண்கிறோம்.

அது போன்ற ஆயிரம் மாற்றங்களால் சமூகம் உயர்ந்துள்ளது. இப்பொழுது ஸ்ரீ அரவிந்தம் ஆன்மீக மாற்றத்தைத் தருகிறது.

- அதை மனிதகுலம் ஏற்றால் கர்மம் கரையும்.
- காலத்தின் ஆட்சி முடியும்.
- மனம் விரிந்து தோல்வியை இழக்கும்.
- தீமை முழுவதும் கரைந்து மறையும்.
- சத்தியஜீவிய அற்புதம் அன்றாட நிகழ்ச்சியாகும்.
- யுகம் க்ஷணமாகும்.
- புறம் அகத்தின் பகுதியாகும்.
- ஜீவாத்மா பிரபஞ்ச ஆத்மாவாகி தானே பரமாத்மா என விளங்கும்.

வேட்டையாடியவன் விவசாயம் செய்ய முற்பட்ட பொழுதும், தான்யத்தை விளைவித்துத் தானே சாப்பிட்டவன், பிறருக்கு விற்று வியாபாரத்தை ஏற்படுத்திய பொழுதும், பண்ட மாற்றுக்குரிய பணம், சமூக சக்தியாகி உலகை ஆண்ட பொழுதும், பேச, கூட்டல், கழித்தல் போட ஏற்பட்ட கல்வி அறிவால் அரசபதவியை அறிஞனுக்கு அளித்த பொழுதும் இன்னும் ஆயிரம் செயல்களில் மனித முன்னேற்றம் ஏற்பட தலைகீழ் மாற்றத்தைக் கருவியாக்கியது. அவை அனைத்தும் பகுதியான மாற்றங்கள். ஸ்ரீ அரவிந்தம் அனைத்துப் பகுதிகளும் கொண்ட முழுமையான பரிணாம ஆன்மீக மாற்றம்.

காய்கனியை உண்டு வாழ்ந்தவன் பயிரிடப் பயின்றான். ஓரிடத்தில் காய் தீர்ந்துவிட்டால் அடுத்த இடம் சென்றான். மனிதன் நாடோடியாய் வாழ்ந்தான். இயற்கை கொடுத்த உணவை உண்டான். அறிவு வளர்ந்தது. தானே பயிரிட ஆரம்பித்தான். இயற்கை அது வரை உற்பத்தி செய்ததை அவனே விவசாயியாகி உற்பத்தி செய்தான். அதன் விளைவாக நாடோடி மனிதன் ஊரும், குடியுமாக ஓரிடத்தில் நிலைத்தான். அடுத்த கட்டத்தில் சுத்தி, சக்கரம், பலகை, வீடு, பாத்திரம் என ஆயிரம் பொருள்களை கற்பனையால் உருவாக்கினான். இவை இயற்கை உற்பத்தி செய்தவையில்லை. அவற்றை உற்பத்தி செய்ய பாக்டரியை ஏற்படுத்தினான். நாடோடி இயற்கை உற்பத்தி செய்த தான்யத்தை இவனே உற்பத்தி செய்தான். இயற்கையிலில்லாத பொருள்களை மனதால் உற்பத்தி செய்து, அவற்றை உற்பத்தி செய்ய இயற்கையிலில்லாத பாக்டரியை ஏற்படுத்தினான். இவை மாற்றம். செயலின் போக்கு தலைகீழ் மாறுகிறது. உடல் விடுதலை பெற்றது. கடுமையான உடலுழைப்பு கடுமையிழந்தது. தனக்காக உற்பத்தி செய்தவன் பிறருக்காக உற்பத்தி செய்து, இல்லாத வியாபாரம் என்ற பழக்கத்தை ஏற்படுத்தினான். வாழ்வு கடுமையிழந்து ஓரளவு சௌகரியம் பெற்றது. கல்வி, பணம், விஞ்ஞானம் போன்றவை எழுந்தன. புதியன மாற்றத்தை ஏற்படுத்தின. மனிதன் இயற்கையினின்று விடுபட்டான். வனவிலங்குகளினின்று பெரு விடுதலை பெற்றான். குளிர், புயல், பஞ்சம், பூகம்பம் ஆகியவற்றிலிருந்து பெரும்பாலும் விடுதலையடைந்தான். அவன் பெற்ற வசதிகள் விடுதலைகளாகும். அவை ஆயிரம், பதினாயிரம். அதுவே நாகரீகம்.



1900இல் இப்பெரும் சாதனைக்குப்பின் மனிதன் தான் பெற வேண்டிய விடுதலைகள் மேலும் ஏராளம் என அறியாத நிலையில் பகவான் செயல்பட ஆரம்பித்தார். அச்சமயம் மனிதன்

- காலத்திற்குக் கட்டுப்பட்டவன்.
- தோல்வியை விலக்க முடியாத நிலையிலுள்ளவன்.
- அறியாமையிலிருந்து தப்பிக்க முடியாதவன்.
- கர்மம் ஆட்சி செலுத்தியது.
- தீமை புவியெங்கும் பவனி வந்தது.
- அகந்தை ஆர்ப்பாட்டம் செய்து, ஆக்ரமித்துக் கொண்டி–ருந்தது.

அதுவரை மனிதன் ஜடமான உடலிலிருந்தும், உயிரிலிருந்தும், மனத்திலிருந்தும் தலைகீழ் மாற்றத்தால் அனுதினமும் விடுதலை பெற்றவாறிருந்தான். பகவான் ஆன்மீக மாற்றம் உண்டெனக் கண்டார். ஆன்மாவுக்குப் பரிணாம வளர்ச்சியுண்டெனக் கண்டார். கண்டது நாராயண தரிசனமாயிற்று. உலகம் கர்மத்திலிருந்தும், காலத்திலிருந்தும், மனத்திலிருந்தும், தீமையிலிருந்தும், வேதனையினின்றும், மரணத்தி–லிருந்தும், பாவத்திலிருந்தும் தலைகீழ் மாற்றத்தால் விடுதலை பெறலாம் எனக் கண்டார்.

- அவர் கண்ட தத்துவம் ஆன்மீகப் பரிணாமம்.
- அதுவே ஸ்ரீ அரவிந்தம்.
- அதை ஆன்மீகத் தலைகீழ் மாற்றம் எனலாம்.

இக்கருத்து வாசகர் மனத்தை சிறிதளவேனும் தொட்டால், *The Life Divine* புரியும், மனமாற்றப் பலன் பெறலாம், அமெரிக்க கோடீஸ்வரனாக இந்திய மக்கள் சுபிட்சம் பெறலாம்.

எதையும் நம்பாத ஜடமனம் வளர்ந்து பிராணனில் (vital mind) மனமாகச் செயல்பட்டால் இல்லாத மாயையை உற்பத்தி செய்து அதில் திளைக்கிறது. மேலும் பரிணாமத்தால் சிந்தனை மனமானால் அது பிரம்மத்தை இலட்சியமாகக் கொண்டு, பகுதியான பிரம்மத்தை முடிவாகக் கொள்கிறது. தொடர்ந்த வளர்ச்சி மௌனம், திருஷ்டி, நேரடி ஞானம், ஞானம் ஆகியவற்றைக் கடந்து சத்தியஜீவியத்திற்குக் கொண்டு வரும் பொழுது பூரண பிரம்மம் பொலிவு பெறும் சிருஷ்டி பிரம்மத்தின் முன்னிலையில் பிரபஞ்ச முழுவதும் மூன்றாம் நிலைக் காலத்தில் எழுந்து அற்புதத்தை அவனியில் வாழ்வாக நிலை நிறுத்தும்.

ஜடத்தில் உள்ள உயிர் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஜடம் தாவரமானால்,

- தானுள்ள இடத்தில் உள்ள உணவால் உருவம் உயிர் பெறுகிறது.
- மிருகம் இடம் விட்டு இடம் சென்று இயற்கையில் உள்ளதை உண்டு உயிர் வாழ்கிறது.
- மனிதனும் விலங்காக வாழ்க்கையை ஆரம்பித்தான்.
- விலங்கில் செயல்படாத மனம் மனிதனில் செயல்படுவதால்,
- **விவசாயத்தால் இயற்கையின் உற்பத்தித் திறனை தானே மேற்கொண்டான்.**
- தொழில் (industry, manufacturing) என்பது மனம் ஜடத்தில் செயல்பட்டுப் பொருளை உருவாக்கி உற்பத்தி செய்வது. அது இயற்கையிலில்லாத பொருள். அப்பொருளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் இயற்கையிலும், உலகிலும் இல்லாதது.
- மனம் பிராணனில் – சமூகத்தில் – செயல்படுவதால் வியாபாரம், பேச்சு, போக்குவரத்து, நகரம், மனித உறவு, கலைஎன உற்பத்தியாகி ஜடமான மனிதனின் விலங்கு வாழ்வை மனித வாழ்வாக மாற்றி ஆன்மா வாழ்வில் சட்டம், பண்பை உற்பத்தி செய்வது நாகரீகம்.



- **அவற்றிற்கு அடிப்படையான ஆதாரமாக மனம் சமூகத்தில் சிருஷ்டித்தது கல்வி, சாஸ்திரம் என்றனர் முன்னோர்.**
- ஆன்மா தன்னில் செயல்படுவது (Concentration that dwells on itself) தவம், யோகம். இவற்றின் கருவி மனம்.
- The partial Spirit acts through its own aspects of Silence, Light, Intuition and Knowledge. பகுதியான ஆன்மா தன் அம்சங்களான மௌனம், ஜோதி, ஞானம் செயல்பட்டு தன்னைக் கடந்து முழுமையான ஆன்மா ஆவது சத்தியஜீவியம்.

## சத்தியஜீவியம் பிரம்மம் தேடும் ஆனந்தத்தைச் சிருஷ்டிக்கிறது

விவசாயம் உயிரை வளர்க்கும் உணவை உற்பத்தி செய்கிறது. இதில் மனம் இயற்கையின் செயலை ஏற்றுச் செயல்படுகிறது. In agriculture mind organises the activity of Nature to produce food that sustains life.

தொழிலில் (industry) மனம் ஜடத்தில் அறிவை வளர்க்கும் பொருள்களைச் சிருஷ்டித்து, அவற்றை உற்பத்தி செய்யும் பாக்டரியை–யும், விநியோகம் செய்யும் வியாபாரத்தையும், விளக்கம் தரும் கல்வி–யையும், அவை அனைத்திலிருந்து விடுதலை தரும் மோட்சத்தையும் சிருஷ்டிக்க அடிகோலிற்று.

விடுதலை பெற்ற ஆன்மா தன்னையறியவில்லை. It is an unconscious accomplishment.

விடுதலையைத் துறந்த ஆன்மா தன்னையறிந்து பிரம்மம் தேடிய ஆனந்தத்தை சிருஷ்டிக்க சத்தியஜீவியத்தை பிரபஞ்சத்தில் எட்டியது.

மனம் அறியாமையில் சிருஷ்டித்தது. தன்னையறிந்தபின் ஞானத்தில் மனம் சிருஷ்டிக்க முயலும்பொழுது தானே சத்தியஜீவிய–மாகப் பரிணாம வளர்ச்சி பெறுகிறது.

The human soul mistakenly taken to be the desire soul, comes out

of ignorance to become the psychic which by further evolution discovers itself as Ishwara, the Supramental Being, the Psychic Being in Material Substance thus covering the entire gamut of the play from the Self-Conscious Being to its inversion Matter where Mind serves as the formal object to initiate knowledge, action and delight of existence.

**நமது அன்றாட வாழ்வில் சத்தியஜீவியம்:**

- எப்படி பரமாத்மா ஜீவாத்மாயிற்று என்பது சிருஷ்டி ஏற்பட்ட வழி.
- அதைச் செய்தது சத்தியஜீவியம்.
- Page No.129 *The Life Divine*இல் இந்த விளக்கமிருக்கிறது. அதை முடிவில் சுருக்கிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.
    - சிருஷ்டிஎன்பது பிரகிருதிஎனும் இயற்கை.
    - புருஷன் ஜீவன், பிரகிருதி இயற்கைஎனும் சிருஷ்டி. புருஷன் பிரகிருதியாவது சிருஷ்டி.
    - பிரகிருதிஎன்பது முழுமையாக புருஷனுடைய ஞானதிருஷ்டி.

புருஷன் தன் திருஷ்டியால் சிருஷ்டித்தான். (Seer will)

அது அவன் இச்சை.

- தன்னிச்சையால் சிருஷ்டிக்கும் கருவி சித்–சக்தி.
- சித்–சக்தி சத் புருஷனுடைய (Conscious Being) இச்சை (Will).
- சத்புருஷன் பரிணாமம்எனும் வேலையில் ஈடுபட்டு உள்ளான்.
- வேலைஎன்பது சத்தியத்தை சக்தியின் ரூபமாக்குவது.
- சத்தியம்என்பது புருஷன் நிர்ணயித்த சத்தியம்.
- புருஷன் தான் ஏற்கனவே சிந்தனையால் சிருஷ்டித்த சத்தியத்திற்கு ரூபமும் சக்தியும் தருவது சிருஷ்டிஎன்ற பிரகிருதி.



சத்புருஷன் தானே விரும்பி நிர்ணயித்த சத்தியத்திற்குத் தன் இச்சையால் ரூபமும் சக்தியும் தருவது சிருஷ்டிஎன்பது பகவான் விளக்கம். எதை நமக்குக் கேட்க உரிமையில்லைஎன ரிஷிகள் கூறினார்களோ அதை இச்சொற்களால் பகவான் விளக்குகிறார்.

நம் வாழ்வில் நாமே நமக்கு பிரம்மம் – அதாவது புருஷன் – சத் புருஷன்.

**நாமே நம் வாழ்வின் சிற்பி.**

நமது வாழ்வு நமது சத்தியத்தை வெளிப்படுத்துகிறது.

எது நமக்கு சத்தியம்என நாம் (Self-conception) நிர்ணயிக்கி–றோம்.

சிந்தனையால் நிர்ணயித்ததைச் செயல்படுத்துவது நமது செயல் (will) உறுதி, இச்சை.

நாம் நிர்ணயிக்கிறோம், நாமே செயல்படுத்துகிறோம்.

செயல்படுத்துவதுஎனில் எண்ணம் ரூபம் பெறுகிறது.

ரூபம் பெறும் எண்ணம் தான் பெற்ற சக்தியின் அளவு திறன் பெறுகிறது.

(நமக்கு அக்கறையுள்ள அளவு நாம் சாதிக்கிறோம்).

**பிரம்மம் உலகை சிருஷ்டித்ததும், நாம் நம் வாழ்வை உருவாக்குவ–தும் ஒன்றே – முறை ஒன்று, நிலை வேறு.**

பிரம்மம் தெரிந்து, விரும்பிச் செயல்படுகிறது. நாம் தெரியாமல் ஆசையால் உந்தப்பட்டுக் கண்மூடியாகச் செயல்படுகிறோம். கண்மூடியாகச் செயல்படும் பொழுதும் பிரம்மத்தின் முறையைக் கடைப்பிடிக்கிறோம். பிரம்மம் சத்தியத்தால் செயல்படுகிறது. நம் சத்தியம் துளி, பொய் அதிகம். பொய் குறைந்து மெய் அதிகமாவது ஆன்மீக முன்னேற்றம். எந்த அளவு முன்னேற்றம் தேவையோ, அந்த அளவு மெய் வேண்டும்.

- மனிதன், எந்த அளவு உயர விரும்புகிறானோ அந்த அளவு

சத்தியத்தை மேற்கொண்டால், அவன் தன் பர்சனாலிட்டிக்கு ஏற்றவாறு சாதிப்பான்.

- அன்பன் அதை அன்னையை ஏற்கும் அளவில் விரைவாக, முழுமையாகச் சாதிப்பான்.

## பிரம்மம் தேடும் ஆனந்தம்

பிரம்மமே ஆனந்தம். ஏன் பிரம்மம் ஆனந்தத்தைத் தேடுகிறது? There are grades and variations in ananda as in anyother thing. **மாற்றம் நாம் நாடுவது. ஏற்றம் விரும்பத்தக்கது.** அனந்தமான பிரம்மம், தான் பெற்றுள்ள ஆனந்தத்தை அனந்தமாக மாற்றவல்லது.

- இந்த சிருஷ்டியில் ஒளிந்து கண்டுபிடிக்கும் ஆனந்தத்தைப் பிரம்மம் தேடுகிறது.

ஒரு கேள்வி, இதுவரை சிருஷ்டியிலில்லாத ஆனந்தத்தை இனிப் பரிணாமம் மூலமாக மனிதன் பெறுவதை பிரம்மம் அனுபவிக்கப் போகிறதுஎன நாம் அறியலாம். அது உண்மை, முழு உண்மையில்லை. உண்மை கீழ்க்கண்டவாறுள்ளது.

- பிரம்மம் என்றுமே முழுமையானது.

  நம் ரிஷிகள் அதன் ஓர் அம்சமான அசையாத பிரம்மத்தைக் கண்டு அதுவே முடிவானது என்றனர்.

  பகவான் முதலில் முழுப் பிரம்மத்தைக் கண்டார்.

  – இது முழு ஆனந்தமுடையது.

  – இது என்றும் அதுபோலவே இருந்து வருகிறது.

  – மனிதன் இதை இனிக்கண்டு சச்சிதானந்தத்தின் முழுமையை அறிந்து யோக முன்னேற்றம் பெற வேண்டும். அதுவே பூரணயோகம்.

- **மனிதன் பரிணாமத்தால் முழுப் பிரம்மத்தையும், அதன் முழு ஆனந்தத்தையும் கண்டால் முழுமையான பிரம்மானந்தத்தை அனுபவிப்பது**, மனிதன் மட்டுமன்று, இறைவனான மனிதன் என்ற பிரம்மமும் அப்புதிய ஆனந்தத்தை அனுபவிக்கும்.



- அதனால் நாம் காணப் போவது இனி ஏற்பட வேண்டும் என்பதால் முழுப் பிரம்மமும், அதன் பூரண பிரம்மானந்தமும் இனிமேல்தான் மனிதனால் சிருஷ்டிக்கப்பட வேண்டும்என நாம் நினைக்கத் தோன்றும். அதை விளக்க,

  – முழுப் பிரம்மமே முழுமுதற் கடவுள். ரிஷிகள் அதை அறியவில்லை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் அதைக் கண்டார்.

  – அதில் அகந்தை, தீமை, மனம், காலம், மரணம் சிறுமையில்லை.

  – பரிணாமத்தால் அந்த முழுப் பிரம்மமும் வளர்ந்து அது இதுவரையறியாத ஆனந்தத்தை மனிதன் இறைவன் ஆவதால் அறிய முற்படுகிறது.

- இதைச் சாதிக்க பிரம்மம் ஜடமாகி, தாவரம், மிருகமாகி, மனிதனாகி, சத்தியஜீவனாக முயல்கிறது.

  – மனித முன்னேற்றம் மனத்தின் முன்னேற்றம்.

  – இதை நாம் சமூக முன்னேற்றமாகக் காண்கிறோம்.

  – இது மேல்நிலை அம்சங்கள் கீழுள்ள அம்சங்களில் வெளிப்படுவதாக அமைகிறது.

  – வேட்டையாடியவன், விவசாயம், வியாபாரம், தொழில், நகர வாழ்வு, கல்வி, விஞ்ஞானம், ஆன்மீகம் மூலம் இதையடைய முயல்கிறான்.

- சாதகனுக்கு இரு பாதைகள் எதிர்கொள்கின்றன.

  1) இன்றைய சமூக முன்னேற்றத்திற்குப் பரிணாம சக்தியைப் பயன்படுத்துவது.

  2) பரிணாம வளர்ச்சியை மனிதனைக் கடந்து எடுத்துச் செல்லுதல்.

முதலாவது வாழ்வு ஆன்மாவால் வாழ்ந்து வளர்வது. அடுத்தது ஆன்மா வாழ்வில் வளர்ந்து அதுவே புவி வாழ்வாவது.

## முத்து, வைரம்

முத்தையும், வைரத்தையும் அறிய முடியாத நிலையில் மனிதன் வாழ்ந்தான். சமூகம் வளர்ந்த பின், அவற்றின் மதிப்பு தெரிந்து போற்றிப் பயன்படுத்தி பெருமைப்பட்டான். விஞ்ஞான அறிவு அதிகமாக வளர்ந்த பொழுது, முத்தும், வைரமும் இயற்கையில் எப்படி உருவாகின (Process of making them) என அறிந்து, அதன் மூலம் அவனே அவற்றைச் செய்தான். முத்தும், வைரமும் பிரம்மம் என்ற ஞானம் சித்தித்த ரிஷி முத்தைக் கையில் எடுத்து வைரமாக மாற்ற முடியும். அது இரஸவாதம். இது *The Life Divine* இல் உள்ள உதாரணம், விளக்கம்.

தனித்தன்மை, பொதுத்தன்மை, சாரம்என்பதை அறிவதால் அவற்றைப் பயன்படுத்தவும், செய்யவும், மாற்றவும் முடிகிறது. பயன்படுத்த சமூகஅறிவும், செய்வதற்கு விஞ்ஞானஅறிவும், மாற்ற ஆன்மீக ஞானமும் தேவை. விஞ்ஞானஅறிவு ஆன்மீகஅறிவாக மாற insight, intuition, integral experience உள்ளுணர்வு, ஞானம், பூரண அனுபவம் தேவை. பூரண ஞானம் இரண்டறக் கலப்பதால் வருவது. ஞானம் ரிஷியைக் கடந்த யோகியுடையது. உள்ளுணர்வு அறிவைக் கடந்து ஞானத்தையடையும் வழியில் உள்ளது. **அறிவு ஞானமாகு முன் உள்ளுணர்வு insight எழும் வாயில்களை 88ஆகக் கீழே எழுதியுள்ளேன்.** கீழேயுள்ள *The Life Divine* கருத்து எது முழுமையாகப் புரிந்தாலும் insight மின்னலாகத் தெறிக்கும்.

1) சங்கரர் எப்படி மாயையை நம்பினார்?

2) புத்தர் ஏன் பாதியில் விசாரத்தை நிறுத்தினார்?

3) அஞ்ஞான மாயைக்கும், தெய்வீக மாயைக்கும் எண்ணத்தி–லுள்ள தொடர்பு எது?

4) **கணிதம் அறியாத அனந்தமெது?**

5) தெய்வீகமனம் சிருஷ்டிக்கும் சத்தியம் ஏன் தனித்துத் துவங்குகிறது?

6) பிராணமயப் புருஷனிலிருந்து மனோமயப் புருஷனுக்கு மாறுவது எப்படி? மனோமயப் புருஷனிலிருந்து சத்தியஜீவனுக்கு மாறுவது எப்படி?

7) மாயை, சத்தியஜீவியம், அகமும்–புறமும், ஜீவியம், இயற்கை இவற்றிற்குள்ள தொடர்பு.



8) ஜடம் பிரபஞ்ச வாழ்வின் ஆனந்தம். தன் ஜீவியத்திற்குத் தன்னைப் புலன் உணர்வு அறியும் பொருளாகச் சமர்ப்பிக்கிறது.

9) மனம் உலகை சிருஷ்டித்ததுஎன்ற முடிவுக்கு ரிஷிகள் எப்படி வந்தனர்?

10) ஜீவாத்மாவுக்கு அமரத்துவம் உண்டுஎன ஏன் ரிஷிகளால் அறிய முடியவில்லை? (அவர் மனம் ஜடமனம். அதனால் அறிய முடியாது).

11) எதையும் நம்ப மறுப்பவன், மாயாவாதி, பிரம்மம், பிரம்மத்தின் முழுமை.

12) மனம் சச்சிதானந்தத்தின் முறையான அடிப்படை. தன்னை மனம் மூலம் சச்சிதானந்தம் தனக்கே ஜடமாகக் காட்டுகிறது.

13) வாழ்வின் இரு புதிர்கள் – பிறப்பு, இறப்பு. (நினைவுக்குட்பட்ட மனம் நினைவைக் கடந்ததை அறிய முடியாது.)

14) நினைவு, மேல் மனம் அடிமனம் தலை கீழே மாறியது.

15) சன்னியாசி ஆத்மாவை அறிந்ததைப்போல் விஞ்ஞானி ஜடத்தை அறியவில்லை.

16) விரயமில்லை.

17) **நம் வாழ்வில் சிருஷ்டியின் முறை செயல்படும் வகை (Process of creation in our life).**

18) உள்ளுணர்வு – ஞானம் – பூரண ஆத்மானுபவம்.

- அறிவு காலத்தினின்று மூன்றாம் நிலைக் காலத்தைக் காண்பது உள்ளுணர்வு.
- உணர்வு காலத்தைக் கடந்த நிலையினின்று மூன்றாம் நிலைக் காலத்தைக் காண்பது ஞானம்.
- உடல் மூன்றாம் நிலைக் காலத்தைத் தன்னுள் உணர்வது பூரண ஆத்மானுபவம்.

19) முனிவர் – தெய்வ லோகத்திற்குப் போக உள் மனத்தை அடைவது தவிர்க்க முடியாதது. (தலைகீழ் மாறிய சிருஷ்டியை,

பரிணாம நிலைக்கு மாற தலைகீழ் மாறும் வகை இது.)

20) **அனைத்தையும் தன்னுட் கொள்ளும் பரிணாம முக்கியத்துவம் வாய்ந்தது சரணாகதி.**

21) ஜீவனைச் சரணம் செய்தபின் பொருளையும் வெல்ல சுபாவத்–தையும் சரணம் செய்ய வேண்டும்என்பதை அறிய பொருளையும், ஜீவியத்தையும் அறிய வேண்டும்.

22) ஏன் தெய்வீக ஆன்மா ஏற்பட்டது? அதன் அம்சங்கள் கடவுளையும், ஆத்மாக்களையும் அது அனுபவிக்கும் வகை.

23) ஜடம் எழுப்பும் எதிர்ப்பு – அஞ்ஞானம், தமஸ், பிரிவினை, அவற்றின் தத்துவம்.

24) யுகம் க்ஷணமாவது எங்ஙனம்? (புறம் அகமாவது யுகம் க்ஷணமாகும் காரணம்).

25) இலட்சியம் உலகை முந்தியது.

26) அகந்தையின் ஆரம்பம். அதன் அமைப்பு, செயல்.

27) முடிவுவரை முயற்சியை முடிக்கக் கூடாது. (பூரண யோகத்திற்குப் பூரண முயற்சி தேவை).

28) **அற்புதம் மனிதனால் பரிணாமத்தால் சிருஷ்டிக்கப்படப் போவதில்லை. அற்புதம் ஆதி காலம் தொட்டுள்ளது. மனிதன் சத்தியஜீவியத்திற்கு உயர்ந்து அதைக் காண வேண்டும்.**

29) பிரம்மம் ஆனந்தத்தைப் பரிணாமத்தில் தேடுவதுபோல் சிருஷ்டியிலும் பெறுகிறது.

30) மேலெழும் பொழுது, ஒவ்வொரு நிலையிலும் ஒரு திறனை நாம் இழக்கிறோம். கீழே வரும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் ஒரு திறனைப் பெறுகிறோம்.

31) பிரம்மம் தனக்குப் புதிய ஆனந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வல்லது.

32) சிருஷ்டியில் சூட்சும வாய்ப்பு, கண்ணுக்குத் தெரியாத நிர்ப்பந்தம், பலன்என மூன்று நிலைகள் உள்ளன. வாய்ப்பை உள்ளுணர்வால் அறிவது நல்லது. குறைந்தபட்சம் அது



சிந்தனைக்காவது எட்ட வேண்டும்.

33) பிறருக்கு எதையும் சொல்ல முடியாதுஎன்ற கருத்தில் பொதிந்துள்ள ஆன்மீகச் சாரத்தை அறிய வேண்டும். அதைக் கடந்து சென்று சிந்தித்து, உள்ளேயுணர்ந்து, உடலிலும் உணர்ந்து அணு தன்னையறிந்து பரிணாமத்தால் மலரும்படிச் செய்வது ஞானத்தைக் கடந்து செல்ல முயல்வதாகும்.

34) சத்தியஜீவியத் திருவுருமாற்றம் தவிர்க்க முடியாதது.

35) பூரணம் பெற்ற தெளிவான கூர்மை பூரணம் சிறப்பெய்ய உதவும். அந்நிலையில் பகுதிகள் முழுமையை முழுவதுமாக உணரும்.

36) விதி பெற்ற சுதந்திரம்.

37) சுதந்திரம் தன்னை இழக்கும் சுதந்திரத்தால் பேரானந்தம் பெறுவது.

38) மனமும் ஆத்மாவும் ஜடத்தில் செயல்படும் வேகம் அதிகம். அது செயலற்ற நிலையை எழுப்பும். அதனால் செயலற்ற நிலையே சிறந்த செயல்என்றேபடும்.

39) சர்வம் பிரம்மம்என்பதும், உள்ளது ஒன்றேஎன்பதும் எப்படி ஒன்று சேர்கின்றன?

வேத காலத்து ஐக்கியத்தை – புருஷப் பிரகிருதி ஐக்கியத்தை – ஏன் வேதாந்த ரிஷிகள் பிரித்தனர்? விஞ்ஞானி ஜடத்தை அறிந்ததைவிட சன்னியாசி ஆன்மாவை அதிகமாக அறிந்தும், ஏன் பிரம்மத்தின் முழுமையை அறியவில்லை? விஞ்ஞானி ஏன் ஜடத்தின் முழுமையைத் தவற விட்டுவிட்டான்?

40) பிரபஞ்ச ஜீவியத்தினின்று எப்படி ஒருவர் பிரம்ம ஜீவியத்திற்குப் போக முடியும்?

எப்படி பிரபஞ்ச ஜீவியத்தை எட்டலாம்?

41) விசாரம் நடுவில் நிறுத்தப்பட்டால் பிரபஞ்சம் எப்படி அதை ஏற்கிறது. ஏன்?

42) பாதாளமும், பரமாத்மாவும் இணைதல் ஏன் அவசியம்?

43) **ஜீவாத்மாவே பிரபஞ்ச ஆத்மாவும், பரமாத்மாவுமாகும் என்ற**

**கொள்கை நம் வாழ்வில் பழுத்துப் பலன் தருவது எப்படி?**

44) அடிபட்டால் உடல் வலியால் பதிலிறுப்பது அவசியமில்லை.

மரணம் உடலைத் தீண்ட முடியாமல் உடல் உணர்வு பெற்றுள்—ளது.

காலமும், இடமும் அனந்தம்.

காலத்தைக் கடந்த அனந்தமுண்டு.

ஸ்தாணுவே சத்தியம்.

பிரபஞ்ச வாழ்வு அனந்தம்.

ஜீவன் சத்தியம், ஜீவியம் உண்மை.

மனிதன் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன். வாழ்வு அப்படிக் கட்டுப்பட்டதில்லை.

45) அறிவு புலனினின்று விடுபட்டால், ஞானமாகும்.

46) அளவும், தரமும் மாயை.

47) சக்தி ஜீவனின் செயல், தனிப்பட்டதில்லை.

48) சச்சிதானந்தம் சிருஷ்டிக்குமுன் ஏற்பட்ட நிலையற்ற சூட்சும ஆனந்தத்தை சிருஷ்டியில் ஜடப் பொருளில் நிலையாக வெளிப்படுத்த முயல்கிறது.

49) அசைவற்ற சாரமான ஆனந்தம் சலனத்தில் வெளிப்படும் முறைப்படுத்தப்பட்ட ஆனந்தமாகிறது.

50) சிருஷ்டியின் சாவியாக இரகஸ்யம், அதற்குரிய பூட்டான சிருஷ்டி.

மாயை பிரம்ம ஜீவியம்.

மாயை பிரிக்கும் கடனைத் திறமையாக மனம் எனும் கருவிக்கு அளித்தது.

51) தெய்வீக மாயை, சத்தியம்—ஜீவியம், சத்தியஜீவியம், ஜீவனுள்ள முழு எண்ணம், ஜீவனின் கதிரான அலை. இவற்றுள் பொதுவான அம்சங்கள் வேறுபாடு.



52) தெய்வீக ஜீவியத்தின் பொதுவான மனத்தின் உண்மை.

ஆன்மீகச் சட்டம் ஞானி, ஞானம், ஞானம் அறிவதுஎனப் பிரிக்கிறது. சமமான சக்தி, மூன்றாகப் பிரியும் வகை.

53) ஏன் சத்தியஜீவியம் மூன்று நிலைகளை — கடவுள், ஜீவாத்மா, மனிதன் — ஏற்கிறது?

54) சிருஷ்டியின் முடிவு மனம்.

வாழ்வும், ஜடமும் சிருஷ்டியில்லையா?

55) தெய்வீக ஆன்மாவுக்கும் மனித ஆன்மாவுக்கும் உள்ள மாறுபாடு.

56) பிரபஞ்சம் அழிந்தாலும், வாழ்வு இருக்கும்.

57) மரணம் வாழ்வை அமரத்வம் பெறச் செய்கிறது.

58) மனோமயப்புருஷன் நம் ஆன்மாயில்லை.

59) பிணக்கால் அன்பெழும்.

60) சக்தியும் ஜீவியமும் பிரபஞ்சத்தில்தான் இணையும்.

61) லோகங்கள் 7 அல்லது 8, 10 அல்லது 12 ஆகும் என்பது ஏன்?

62) சைத்தியப்புருஷனை வாழ்விற்கும், ஜடத்திற்கும் இடையில் ஏன் வைத்தார்? ஏன் மனத்திற்கும் வாழ்விற்கும் இடையில் வைக்கவில்லை?

63) மேலே போக உள்ளே போக வேண்டியதின் அவசியம்.

64) முக்கிய ரூபத்தை அனந்தம் தன்னிச்சையால் எழுப்புகிறதுஎன்ற

கொள்கையை பகவான் எப்படி நிரூபிக்கிறார்?

65) – பிரம்மம், புருஷா, ஈஸ்வரா, மாயை, பிரகிருதி, சக்தி என்பவை ஒன்று.

– சுயச்சிந்தனை, சுய அளவீடு, சுயமாகக் கிரஹிப்பது என்பவற்றிற்கும் மாயை, பிரகிருதி, சக்திக்கும் உள்ள தொடர்பு.

– புதிய பரிணாம இரகஸ்யம்

இரு வாயில்கள்.

– சிந்தனையால் சிருஷ்டிக்கும் மாயை, செயல்திறனால் சாதிக்கும் பிரகிருதி, ஆகியவை சக்தியில் இணைந்து இரண்டையும் செயல்படுத்துகின்றன.

– **காலமும், கடந்ததும் இணைந்து மூன்றாம் நிலைக் காலம் எழுவது.**

66) காலம் உலகை சிருஷ்டித்தது.

முரண்பாடு மூலம்வரை வாராது.

பிரம்மமே சிருஷ்டி, சிருஷ்டியே பிரம்மம்.

67) நன்மையை இழக்காமல் தீமையை விலக்க முடியாது.

வேண்டாததை முழுமையாக அறிவது வேண்டியதை முழுமை–யாக அறிய உதவும்.

68) சுயஜீவியம் அஞ்ஞானத்தில் பெறும் சுயஅனுபவம் அகந்தை.

ஆன்மாவுடன் நேரடித் தொடர்புஎன்பது ஆன்மாவையும், இயற்கையையும் ஆழத்திலும் மேலும் அறிவது.

69) அஞ்ஞானம் மேல்மனத்தில் பூரணம் பெறுகிறது.

மேல்மனம் அடிமனம் தலைகீழே மாறியது.

சைத்தியப்புருஷன் ஆழ்மனக் குகையில் வசிக்கிறான்.

70) எளிமையான மாறுபாடு சிக்கலான குதர்க்கமாகும்.

71) பரமாத்மாவோ, ஜீவாத்மாவோ முடிவான சத்தியமில்லை.

72) ஐக்கியமும், பிரிவினையுமிருப்பது அவையிரண்டையும் உட்–கொண்ட முழுமையிருப்பதைக் காட்டுகிறது.

73) பூரண ஞானத்திற்கும் மனத்தின் அறிவுக்கும் உள்ள வேறுபாடு.

74) மனித வாழ்வுக்கும் பூரண வாழ்வுக்கும் உள்ள வேறுபாடு.

75) பாதாளத்தையும், பரமாத்மாவையும் இணைப்பது – அவை இணைவது – என்றால் என்ன?

76) பாதாளம் உயர்ந்து பரமாத்மாவுடன் இணைந்து உயர்ந்து,



உருவம் பெற்று முழுமை பெறுவது.

77) பிறவியைக் கடந்த நிலை, பிரகிருதியைக் கடந்தநிலை என்பவற்றைச் சிந்தனையாலும், உள்ளுணர்வாலும், உடல் உணர்வாலும் அறிவது.

78) ஒவ்வொரு நிலையிலும் அஞ்ஞானம் கரைவதை ஓரளவு உணர்வது.

79) ஜடமனம் ஆத்மா சலனமற்றதுஎன அறிந்தால், உயிர், மனம், ஆன்மீகமனம் நம்புபவை எவை?

80) இடைப்பட்ட நிலைகள்

– உடல் பரிணாமவளர்ச்சி பெறும்பொழுது.

– அதை அடுத்தவர்க்கு அளிக்கும் திறன் பெறும் பொழுது.

81) சைத்தியப்புருஷன் ஏக காலத்தில் மேலும், கீழும் போவதை அறிவது.

82) உள்ளே போவதால் யுகம் ஏன் க்ஷணமாகும்?

83) ஜீவன் பிரபஞ்சத்தில் பரவி, சக்தி பெற்று, தன்னையறிந்து, ஆனந்தம் பெறுவதை நமக்கே நாம் விளக்கலாம்.

84) திருவுருமாற்றத்திற்கு ஏன் சரணாகதி இன்றியமையாதது?

85) எப்படி எளிமையும், ஆடம்பரமும் ஒன்றாகும்?

86) அஞ்ஞானம் ருசிப்பதற்கும், ஞானம் ருசிப்பதற்கும் உள்ள வேறுபாடு.

87) பரிணாம வளர்ச்சியில் ஆன்மாவுக்குரிய அம்சங்களுண்டா?

88) அஞ்ஞானம் ருசிப்பது ஜடம்.

ஞானம் ருசிப்பது மனம்.

ஞானம் ஆத்மாவுக்கும், சத்தியஜீவியத்திற்கும் ருசிக்கும்.

*முற்றும்*

❀❀❀

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XV. The Supreme Truth-Consciousness

Page No.141
Para No.18

**This is a new status.**
**It is of the all-pervading Supermind.**
**We can speak of this.**
**It is a further departure.**
**It departs from the unitarian truth of things.**
**It also departs from the indivisible consciousness.**
**The cosmos exists.**
**Unity is essential to its existence.**
**It is an inalienable unity.**
**The consciousness constitutes that unity.**
**We can pursue it a little further.**
**We see it can become truly Avidya.**
**It is the great ignorance.**
**It starts from multiplicity.**
**It is the fundamental reality.**
**It has to travel back to real unity.**
**One has to start from the false unity.**
**Ego has that false unity.**
**The individual centre can be accepted.**



## 15. உயர்ந்த சத்தியஜீவியம்

**இது ஒரு புது அந்தஸ்து.**
**எல்லாவற்றையும் ஊடுருவும் சத்தியஜீவியம்.**
**நாம் இதைப் பற்றிப் பேசலாம்.**
**இது மேலும் விலகுகிறது.**
**ஐக்கியமான சத்தியத்திலிருந்து இது மாறுபடும்.**
**பகுக்க முடியாத ஜீவியத்தினின்று இது மாறுபடும்.**
**பிரபஞ்சம் உண்டு.**
**அது இருக்க ஐக்கியம் அவசியம்.**
**அந்த ஐக்கியம் என்றும் அழியாதது.**
**ஜீவியம் அந்த ஐக்கியத்தை நிறுவுகிறது.**
**நாம் அதைச் சிறிது மேலும் தொடரலாம்.**
**அப்படித் தொடர்ந்தால் அது அவித்தையாவதைக் காணலாம்.**
**அது பெரிய அஞ்ஞானம்.**
**பகுக்கப்பட்ட பலவற்றிலிருந்து அது எழுகிறது.**
**அதுவே அடிப்படை சத்தியம்.**
**அது மீண்டும் உண்மையான ஐக்கியத்திற்குச் செல்ல வேண்டும்.**
**அதற்குப் பொய்யான ஐக்கியத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.**
**அகந்தை அந்தப் பொய்யான ஐக்கியம்.**
**ஜீவனின் மையத்தை ஏற்கலாம்.**

It can be accepted as the determining standpoint.
It is the knower.
It has a consequence.
All the consequences of mind will set in.
They cannot fail to come in.
They are sensation, intelligence, action of the mental will.
We see one more thing.
The Soul acts in the Supermind.
Then there is no ignorance.
Truth-consciousness is the field of knowledge.
It is also the field of action.
The basis is still unity.

The Self is one in all. Page No.141
All things are becoming in itself and of itself. Para No.19
The Self regards itself thus.
The Lord still knows his Force.
The Force is himself.
It is so in act.
It is such in every being as himself in soul.
And it is so himself in form.
It is his own being the Enjoyer enjoys.
It is so, though it is multiplicity.
There is one real change.
It is the unequal concentration of consciousness.
But there is no essential difference of consciousness.
There is no true division in its vision of itself.
The Truth-consciousness has arrived at a position.
It prepares our mentality.
It is not yet that of our mentality.
This we must study.



முடிவு செய்யும் கொள்கையாக அதை ஏற்கலாம்.
அது அறிபவன்.
அதற்குப் பலன் உண்டு.
மனத்தின் எல்லாப் பலன்களும் தொடரும்.
அது வரத் தவறுவதில்லை.
உணர்ச்சி, அறிவு, செயல், திறன் ஆகியவை அவை.
மேலும் ஒன்றைக் காண்கிறோம்.
ஆத்மா சத்தியஜீவியத்தில் செயல்படுகிறது.
அப்படியானால் அறியாமையில்லை.
சத்தியஜீவியம் ஞானத்திடல்.
அத்துடன் அது செயல்படும் அரங்கமும் அதுவே.
அடிப்படை ஐக்கியமாகவே இருக்கிறது.

பிரம்மம் எங்கும் ஒன்றே.
அனைத்தும் பிரம்மத்தின் வெளிப்பாடுகள்; அதனுள் வெளிப்படும்.
பிரம்மம் தன்னை அப்படிக் கருதுகிறது.
ஈஸ்வரன் அவன் சக்தியை அறிவான்.
சக்தி அவனே.
செயலிலும் அப்படியே.
எல்லா ஜீவன்களிலும் அவனே ஆத்மாவில் உறைகிறான்.
எல்லா ரூபங்களிலும் அதுவே உண்மை.
அவன் அனுபவிப்பது அவனுடைய ஜீவன்.
பலவாகப் பிரிந்தாலும், இது உண்மை.
ஓர் உண்மையான மாற்றம் உண்டு.
ஜீவியம் மாறுபட்ட செறிவை நாடுவது இது.
ஜீவியத்தில் அடிப்படையான வேறுபாடில்லை.
ஜீவன் தன்னைத் தன் திருஷ்டியில் காண்பதில் பிரிவினையில்லை.
சத்தியஜீவியம் ஒரு நிலைக்கு வந்துள்ளது.
அது நம் மனப்போக்கை நிர்ணயிக்கிறது.
இன்னும் அது நம் மனப்போக்காகவில்லை.
இதை நாம் ஆராயவேண்டும்.

**Thus we can seize Mind at its origin.**
**It is here a great lapse is made.**
**It is a lapse from high and vast wideness to the ignorance.**
**The wideness is of the Truth-Consciousness.**
**The ignorance is of the division.**
**This is the apprehending Truth-Consciousness.**
**It is much more facile to our grasp.**
**It is so because of its nearness to us.**
**It foreshadows our mental operations.**
**We were struggling to express a remoter realisation.**
**We attempted it in our intellectual language.**
**It is a barrier.**
**We have to cross it.**
**It is less formidable.**

*The End.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பண்புகள்மூலமே பிரபஞ்சத்தை நாம் அறிகிறோம் என்கிறார் பகவான். இன்று நம் உலகம்என நாம் அறிவது, நம் பண்புகளால் நிர்ணயிக்கப்படுபவை. முழுப்பிரபஞ்சத்தை அறிய, அதற்குரிய பண்புகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். முதற்படியாக இன்றுள்ள பண்புகளுக்கு அடுத்தநிலை பண்புகளை ஏற்றுக்கொண்டால், நம் உலகம் சற்று விரிவடையும்.

***உயரும் பண்பு விரியும் பிரபஞ்சம்.***



**இவ்விதம் நாம் மனத்தையும், அதன் ஆதியையும் பற்றலாம்.**
**இங்கு ஒரு பெரிய குறை ஏற்படுகிறது.**
**உயர்ந்து பரந்த விசாலம் அறியாமையாகிறது.**
**விசாலம் சத்தியஜீவியத்துடையது.**
**அறியாமை பிரிவினைக்குரியது.**
**இதுவே பிரக்ஞா.**
**நமக்கு எளிதில் பிடிபடக்கூடியது இது.**
**நமக்கு அருகிலிருப்பதால் அது பிடிபடுகிறது.**
**நம் மனம் செயல்படுவதை அது முன்கூட்டி அறிவிக்கும்.**
**இதுவரை சிரமமான சித்தியை விளக்க முயன்றோம்.**
**நம் பகுத்தறிவின் மொழியால் அதைப் பற்ற முயன்றோம்.**
**அது தடை.**
**நாம் அதைக் கடக்கவேண்டும்.**
**தடையின் சிரமம் இங்கு குறையும்.**

*முற்றும்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணம் - சிந்தனை - சிருஷ்டி - ஞானம் - சத்தியஜீவியம் உயர்நிலைகள். மனிதன், அறிவு உணர்வின் அனுபவம் - உடலின் திறன். ஜடத்தின் ஐக்கிய ஞானம் அறியாமை தன்னை அறிவாகக் காண்பது. எல்லாம் உணர்ந்த ஜடம் என்பது அடுத்த வகையில் சொல்லப்படுவது. அவை சந்திக்குமிடத்தில் ஆன்மீகப் பரிணாமம் ஆரம்பிக்கிறது.

***பரிணாமமும் சிருஷ்டியும் சந்தித்தால்***
***வளராத ஆன்மா வளர ஆரம்பிக்கும்.***

# வல்லுநரை விஞ்சும் அரசியல்வாதி

N. அசோகன்

வல்லுநர்களின் அறிவு நம்மை வியக்கவைக்கும். சைக்கிள் தயாரிப்பில் திறமைபெற்ற வல்லுநர்கள் ஒரு சைக்கிளைப் பார்த்தவுடனேயே செயினின் தரம் சரியில்லை; கொள்முதல் பிரிவில் நல்ல தரமான இரும்பை வாங்குவதாகத் தெரியவில்லைஎன்று உடனே சொல்லிவிடுவார்கள். ஒரு துறையில் வல்லமை பெற்ற நிபுணர் அத்துறையில் இயங்கும் ஒரு கம்பெனிக்குள் வந்து ஆராய்ச்சி செய்யும்பொழுது அங்குள்ளவர்களைவிட அக்கம்பெனியைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்வார். குடும்பக் கட்டுப்பாட்டிற்கான அறுவைசிகிச்சை அதிகபட்சமாகச் செய்ததற்காக தேசிய விருது வாங்கிய மருத்துவமனைக்கு வந்த ஆடிட்டர் அம்மருத்துவமனை சாதித்ததாகச் சொல்வதில் உண்மையில்லை என்றார். 1,700 அறுவை சிகிச்சை செய்ததாகச் சொல்பவர்கள் 200 ஆபரேஷனுக்குத்தான் மயக்க மருந்து வாங்கியுள்ளார்கள். ஆகவே இதில் உண்மையில்லை என்று நிரூபித்தார். வானிலை வல்லுநர்கள் ஒரு கிராமத்திற்கு வந்து 100 அடி ஆழத்திற்கு மண்ணைத் தோண்டிப் பார்த்துவிட்டு கடந்த 100 வருடங்களில் எவ்வளவு மழை பெய்துள்ளது என்று கணக்கிட்டுச் சொல்லிவிடுகிறார்கள். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது வல்லுநர்களின் அறிவு மிக உயர்ந்ததாகத் தோன்றுகிறது. இருந்தாலும் எதிர்காலத்தில் சாதிக்கப் போவது இவ்வறிவில்லை.

வீடு கட்டவேண்டும், அறுவைசிகிச்சை செய்யவேண்டும், மாணவனின் அறிவுத்திறனை மதிப்பிடவேண்டுமென்ற இடங்களில் வல்லுநரின் அறிவுதான் இறுதியானது. ஆனால் ஒரு வல்லுநரால் ஒரு மேதாவியின் அறிவை எடைபோட முடியாது. ஒரு மனிதனிடம் பெரிய தலைமைக் குணமுள்ளதென்பதை வல்லுநரால் முன்கூட்டிச் சொல்ல முடியாது. ஒரு தேசத்தில் இதுவரை பார்த்தறியாத சூழ்நிலை உருவாகும்பொழுது அதை சமாளிப்பதெப்படி என்பதில் வல்லுநரே தோற்கிறார். 1947இல் காஷ்மீர் ஒரு பிரச்சினையாக உருவெடுத்தபொழுது அரசியல் வல்லுநரான மவுண்ட் பேட்டன், ஐக்கிய நாடுகள் சபைக்குப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு போக நேருவிடம் சொன்னார். ஆனால் இன்றுவரை தீராத பிரச்சினையாகக் காஷ்மீர் உள்ளது. ஆனால் அதே ஆண்டு இனக்கலவரம் மூண்டு பத்து இலட்சம் பேர் அகதிகளாக இந்தியாவிற்கு வந்தபொழுது நேருவும், பட்டேலும் என்ன செய்வதுஎன்று தெரியாமல் விழித்தார்கள். ஆனால் வல்லுநரான மவுண்ட் பேட்டன் ஒரு நிமிடத்தில் அப்பிரச்சினைக்குத் தீர்வு சொன்னார். ஆகவே தெரிந்த இடங்களில் சாதிக்கும் வல்லுநர், தெரியாத இடங்களில் தோற்கிறார்.

காமராஜர் முதல்வராக இருந்தபொழுது சென்னையில் ரிசர்வ் வங்கி இருக்குமிடத்தில் ஒரு மேம்பாலம் கட்டும் வேலை வெகு நாள்களாகத் தாமதமாகிக்கொண்டிருந்தது. விதிமுறைகளின் குறுக்கீட்டால் இந்தத் தாமதம் நேர்ந்திருந்தது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் இரயில்வே துறை அமைச்சர் ஆகியோரை காமராஜர் அழைத்து கலந்துரையாடல் செய்தார். வழக்கம்போல் பேச்சுவார்த்தையில் முடக்கம் வந்தது. இரயில்வே அமைச்சர் எழுந்து போக முயன்றார். அப்பொழுது காமராஜர் குறுக்கிட்டு, "தயவுசெய்து அமருங்கள். நாம் மக்களுக்குச் சேவை செய்யும் அமைச்சர்கள். அரசாங்கத்தில் வேலை செய்யும் அதிகாரிகள் அல்ல. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளால் சாதிக்க முடியாததை சாதிக்கத்தான் நாமிருக்கிறோம். இப்பிரச்சினைக்கு ஒரு வழியைக் கண்டே தீர்வோம்" என்றார். அதன்படி ஒரு தீர்வு அக்கலந்தாலோசனையில் கண்டுபிடிக்கப்பட்டு அந்த மேம்பாலம் கட்டப்பட்டது. வல்லுநரின் அறிவு எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அது கடந்தகாலத்தைச் சேர்ந்தது, மற்றும் பகுதியானது. வல்லுநருக்கு எதிர்காலத்தையோ அல்லது முழுமையைப் பற்றியோ தெரியாது. ஆனால் அரசியல்வாதிகள் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பவர்கள். அதனால் அவர்களால் வல்லுநரைத் தாண்டிச் செயல்பட முடியும். வல்லுநரைப்போலவே மனிதனின் அறிவும் பகுதியானது; கடந்தகாலத்தைச் சேர்ந்தது. ஆனால் மனிதனின் ஆன்மா எதிர்காலத்தையும் உள்ளடக்கியது. அதற்கு முழுமையான அறிவுமுண்டு.

நாம் செய்கின்ற காரியங்களை வெற்றிகரமாக முடிக்க ஆசைப்படுகி-

றோம். நமக்கு அனுபவமுள்ள இடங்களில் இது சாத்தியமாகிறது. முன்னனுபவம் இல்லாத இடங்களில் நாம் எப்படிச் செயல்படுவதென்று தெரியாமல் திகைத்து நிற்கிறோம். பழைய அனுபவத்தைக்கொண்டு புதிய துறையில் செயல்பட முயன்றால் அங்கே வேலை கெட்டுப்போகிறது. ஒரு பிரச்சினை தீர மறுக்கும்பொழுது அங்கே நம் அறிவு ஆழ்ந்து சிந்திக்கிறது. அச்சிந்தனை நல்ல பலனை அளிக்கலாம் அல்லது தவறிப்போகலாம். ஆனால் நம் ஆன்மா சிந்திக்க மறுக்கிறது. அந்த மறுப்பு, தீர்வை அளிக்கிறது. ஏனென்றால் மௌனம் சிந்தனையைவிட சக்திவாய்ந்தது. "என்ன செய்வதுஎன்று எனக்குத் தெரியவில்லை" என்று உண்மையாக ஒத்துக்கொள்வதில் அடக்கம் இருக்கிறது. அந்த அடக்கம் ஆன்மாவை வெளிக்கொண்டுவருகிறது. ஆன்மீக மௌனம் கொண்டுவரும் தீர்வு சிந்தனையில் பிறக்கும் தீர்வைவிட சக்திவாய்ந்தது. அந்தத் தீர்வு ஆன்மா கொண்டுவரக்கூடிய எண்ணற்ற சாத்தியக்கூறுகளில் ஒன்றாகவிருக்கும். இந்த ரீதியில்தான் அனுபவசாலியான அரசியல்வாதி, வல்லுநரான அதிகாரியைத் தாண்டிச் செயல்படுகிறார். அதாவது முழுமையை உணர்ந்த அரசியல்வாதி, பகுதியை மட்டும் அறிந்த வல்லுநரைக் கடந்து செயல்படுகிறார்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

'நான், தனி' என்பதைத் தாண்டினால் மேலே போகும்பொழுது எல்லாம் ஒன்றிலும், ஒன்று எல்லாவற்றிலும் தெரியும். நான் பரிணாம மனிதனல்லன், ஆன்மீக மனிதன்என அறிந்தால் கீழே வரும்பொழுது எல்லாம் ஒன்றிலும், ஒன்று எல்லாவற்றி-லும் தெரியும்.

*உபநிஷத உண்மை.*



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

நாங்கள் அன்னையிடம் வந்ததில் இருந்து இன்றுவரை எங்களிடம் ஏற்பட்ட மகிழ்ச்சி, உயர்வு என்னஎன்பது பற்றி நான் இப்போது தெரிவிக்கப் போகிறேன்.

1999ஆம் ஆண்டு மே மாதம் தியான மையம் இருக்கின்ற தெருவிற்கு வாடகை வீட்டிற்கு வந்துசேர்ந்தோம். அதன்பிறகு தியான மையத்துடன் எங்களுக்கு நல்ல ஒரு தொடர்பு கிடைத்தது. மாதத்தின் முதல் தேதியில், அதாவது சுபிட்ச தினத்தில் நடைபெறும் இசைத் தியானத்தில் கலந்து கொள்வோம். ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு தியான மையத்திற்கு வந்திருந்து, சுமார் 30 நிமிடம் தியானம் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவிடுவோம். நாட்கள் செல்லச்செல்ல, ஸ்ரீ அன்னை, ஸ்ரீ பகவான் மீது அதிக ஈடுபாடு ஏற்பட்டது. தியான மையப் பொறுப்பாளர் அவ்வப்பொழுது எங்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார்கள்; தொடர்ந்து எங்களுக்கு நல்ல வழிகாட்டியும் வருகின்றார்கள். இதில் எனக்கு/எங்களுக்குக் கிடைத்த பல அனுபவங்களில் ஒன்றை மட்டும் இவ்விடம் தெரிவிக்கின்றேன்.

சில ஆண்டுகட்குமுன் (5.6.97) என்னை தற்காலிகப் பணிநீக்கம் செய்தார்கள். என்மீது குற்றம் உள்ளதாஎன்று பார்ப்பதற்கு வேண்டு-மென்றே தாமதப்படுத்தி 3 வருடம் ஆனது. என்மீது குற்றம் இல்லை என்று நிரூபணம் ஆனபிறகும் எனக்குப் பணி ஆற்ற வாய்ப்பு வழங்கவில்லை. பல முறை முறையிட்டும் பலன் இல்லை. எங்களது நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரைச் சந்திக்க சென்னை அலுவலகம் சென்றேன். என்னை சந்திக்க நிர்வாக இயக்குனர் மறுத்துவிட்டார். இந்த நிலையில் என்னை சந்திக்க மறுத்த நிர்வாக இயக்குனரும், அதற்குப் பிறகு வந்த நிர்வாக இயக்குனரும் மாற்றலாகி சென்றுவிட்டார்கள். ஏப்ரல் 2003இல் புதிய நிர்வாக இயக்குனர் பணியில் சேர்ந்தார். சென்னைக்குச் சென்று புதிய நிர்வாக இயக்குனரைச் சந்திக்கும்படி எனது அலுவலக நண்பர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்போது சென்றுவரலாம்என்று இருந்தேன். இந்த நேரத்தில்தான் அன்னைக்கு சர்வீஸ் டிவோட்டியாகச் சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தது.

சுமார் ஒரு வார காலத்தில் நிர்வாக இயக்குனர் அவர்களிடமிருந்து எனக்குக் கடிதம் வந்தது. ஏதேனும் கோரிக்கை (grievance) இருந்தால் உடனே மனுக் கொடுக்கும்படி கடிதம் வந்தது. இந்த விசயத்தை தியானமையப் பொறுப்பாளர் அவர்களிடம் தெரிவித்தேன். "கடிதம் எழுதி, அன்னையிடம் சமர்ப்பணம் செய்து, நிர்வாக இயக்குனருக்கு அனுப்பி வையுங்கள். நல்லது நடக்கும்" என்று சொன்னார்கள். அதன்படி கடிதம் அனுப்பிவைத்தேன். தியான மையத்திற்கு வந்திருந்து எனது கடிதத்தை மூன்று முறை படித்துவிட்டு தியானம் செய்து கடிதத்தை அனுப்பினேன். சுமார் 10 நாட்கள் வரை எந்தத் தகவலும் இல்லை. இந்த நேரத்தில்தான் 3 நாள் இடையறாத பிரார்த்தனை செய்தேன். தியான மையத்தில் காலை 6 மணி முதல் மாலை 6.30 மணி வரை பிரார்த்தனை செய்தேன். மறுநாளே எனது அலுவலக நண்பர் எங்கள் வீட்டிற்கு வந்தார். "உங்கள் கடிதத்தை நிர்வாக இயக்குனர் படித்துவிட்டு, வேண்டிய ரெக்கார்டுகளையும் பார்த்துவிட்டார். உங்களைப் பார்க்க விரும்புகிறார். அவசியம் நாளை நிர்வாக இயக்குனரை சந்தியுங்கள்'' என்று வற்புறுத்தினார். இதற்கு மேலும் தாமதப்படுத்தக் கூடாதுஎன்று தியான மையப் பொறுப்பாளர் அவர்களிடம் இந்த விவரங்களைத் தெரிவித்தபோது, மிக்க மகிழ்ச்சி அடைந்து, "உடனே சென்னை சென்று உங்கள் நிர்வாக இயக்குனரைச் சந்தியுங்கள்'' என்றார். அதன்படி சென்னைக்குப் புறப்பட்டேன். சென்னைக்குச் சென்ற பயணமே மிகஎளிதாக இருந்தது. சென்னை அலுவலகம் சென்ற உடனேயே நிர்வாக இயக்குனரைச் சந்தித்தேன். என்னுடைய கோரிக்கையை மிக்க கனிவுடன் கேட்டார். நான் சொல்லவேண்டிய பல விசயங்களைச் சக அலுவலர்கள் நிர்வாக இயக்குனருக்குப் பரிந்துரை செய்தார்கள். இதுவே மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. "நீங்கள் ஊருக்குத் திரும்புங்கள். ஆர்டர் அனுப்புகிறேன். உடனே பணியில் சேருங்கள்" என்று நிர்வாக இயக்குனர் தெரிவித்தார். அதன்படி எனக்குப் பணி உத்தரவு கிடைத்தது. மறுநாளே (1.7.2003) பணியில் சேர்ந்தேன். இது எனது வாழ்க்கையில் நடந்த மிகப் பெரிய ஆச்சரியம். ஸ்ரீ பகவானுக்கும், ஸ்ரீ அன்னைக்கும் நன்றி!!

❀❀❀



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**41.** **நம்முடைய வாழ்க்கைக்கு அடிப்படை நம்முடைய உடம்பாகும். அதனுடைய இயற்கையான சுபாவம் அசைவில்லாமல் இருப்பதாகும். நம்முடைய பிராண மையம்தான் அதற்கு சக்தியைக் கொடுத்து இயங்கவைக்கிறது.**

**42.** **கர்மயோகி அவர்கள் நம்முடைய பர்சனாலிட்டியை ஒன்பது நிலைகளாகப் பிரித்துள்ளார். முதலிடம் வைக்கின்ற சுத்த அறிவுக்கு தத்துவஞானி சின்னமாக விளங்குகிறார். இரண்டாம் இடம் வைக்கின்ற உணர்வு கலந்த அறிவுக்கு கவிஞர் சின்னமாக விளங்குகின்றார். மூன்றாம் இடத்தில் இருக்கின்ற உடம்பு சம்பந்தப்பட்ட அறிவுக்கு திறம்படச் செயல்படுபவர் சின்னமாக விளங்குகின்றார். ஐந்தாம் இடம் வைக்கின்ற சுத்த பிராண மையத்திற்குப் போர்வீரன் சின்னமாக விளங்குகின்றான். ஒன்பதாம் இடம் வைக்கின்ற சுத்த ஜடத்திற்கு உடம்பே சின்னமாக விளங்குகிறது.**

**43.** **மேதாவி என்பவர் உள்எழுச்சியால் செயல்படுபவர். அவருக்குக் கிடைக்கின்ற உள்ளெழுச்சி நம்முடைய மானிட அறிவை தாண்டிய உயர்நிலையில் உள்ள எழுச்சிமயமான அறிவு நிலையில் இருந்து வருகின்றது.**

**44.** **அவதாரம் என்பவர் இறைவனுடைய அம்சமாகப் பூவுலகின் பரிணாம வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக வருகின்றவர் ஆவார்.**

**45.** **கடவுளைக் கண்டு அச்சப்பட்டுக்கொண்டிருந்த யூதமக்களுக்கு இறைவனுடைய அன்பை உணர்த்த வந்த அவதாரம் ஏசுநாதர். ராம அவதாரம் மௌனத்தால் செயல்படும் உயர்மனம் பூவுலகில் இறங்கியதை குறிக்கிறது. கிருஷ்ண அவதாரம் கடவுள்கள் உறைகின்ற மேல்மனம் பூவுலகில் இறங்கியதைக் குறிக்கின்றது. புத்தபிரான், ஆதிசங்கரர் மற்றும் சுவாமி விவேகானந்தர் - மூவரும் சிவபெருமானுடைய வெளிப்பாடுகள் ஆவார்கள். புத்தபிரான் அகந்தையையும், ஆசையையும் அழித்து,**

நிர்வாணம் என்ற நிலையை எய்தினார். ஆதிசங்கரர் நிர்குண பிரம்மத்தை எய்தினார். சுவாமி விவேகானந்தர் தேக்க நிலையில் இருந்த இந்து மதத்திற்குப் புத்துயிர் கொடுக்க வந்தார்.

46. அசுரர்கள் என்பவர்கள் இறைவனுக்கு எதிராகச் செயல்படுபவர்கள். உண்மை தடம்புரண்டு பொய்யாக மாறியபொழுது பொய்யின் தலைவனான அசுரன் பிறந்தான். வாழ்க்கை தடம்புரண்டு மரணமாக மாறியபொழுது மரணத்தின் தலைவனான அசுரன் பிறந்தான். ஆனந்தம் தடம்புரண்டு துன்பமாக மாறியபொழுது துன்பத்தின் தலைவனான அசுரன் பிறந்தான். ஒளி தடம்புரண்டு இருளாக மாறியபொழுது இருளின் தலைவனான அசுரன் பிறந்தான்.

47. ஒருவருடைய தனித்தன்மையை வலுப்படுத்தி ஒரு வடிவமில்லாத கூட்டத்திலிருந்து அவரைப் பிரித்துக்காட்டுவதே அகந்தையினுடைய வேலையாகும். அப்பட்சத்தில் அகந்தை ஓர் உபயோகமான வேலையைச் செய்கிறது. ஆனால் ஆன்மா இறைவனோடு ஓர் ஐக்கியத்தைப் பெற விரும்பும்பொழுது இப்படித் தனித்தன்மையை வலியுறுத்தும் அகந்தையே இடையூறாக இருக்கிறது.

48. சூட்சும ஜடநிலைஎன்பது ஜடநிலையினுடைய கண்ணிற்குத் தெரியாத சூட்சுமத் தொடர்ச்சியாகும். கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் நம்முடைய திட சரீரத்தைவிட நம்முடைய சூட்சுமச் சரீரம்தான் உண்மையானது என்று ஸ்ரீ அரவிந்தர் சொல்கிறார்.

49. பரிணாமம்என்பது ஜடத்திற்குள் ஏற்கனவே மறைந்திருப்பது வெளிவருவது ஆகும். ஜடம்என்பது சச்சிதானந்தத்தினுடைய தலைகீழான வடிவம்தான். ஜடத்திலிருந்து உயிர் வெளிப்படுவது முதல் வெளிப்பாடாகும். அறிவு வெளிப்படுவது இரண்டாவது வெளிப்பாடாகும். சத்தியஜீவியம் வெளிப்படு-வது மூன்றாவதாகும்.

50. நம்முடைய அறிவு ஆன்மாவைத் தன்னுடைய புலன்களின்மூலம் பார்க்கும் பொழுது ஆன்மா ஜடமாகத் தெரிகிறது.

51. ஜடநிலையில் ஒரு செயல்பாட்டிற்கு எதிர்ச்செயல்பாடு நிகழ்வதைப்போல உணர்வு நிலையிலும் செயல்பாடும், எதிர்ச்செயல்பாடும் உண்டு. வாய்ப்பு என்று ஒன்று எழுந்தால் தடைகளும் எழத்தான் செய்யும்.



52. வாழ்க்கையில் சராசரிக்கு மேலும், கீழும் இருப்பவர்களுக்கு வாழ்க்கை எதிர்மாறாகப் பலன் அளிக்கிறது. சராசரிக்கு மேலுள்ளவர்க்குப் பலனளிக்கும் வாழ்க்கை அதே செயலைச் செய்யும் சராசரிக்குக் கீழுலுள்ளவர்களைத் தண்டிக்கிறது. வாழ்க்கையில் இச்செயல்பாடு பலத்தைப்பொருத்ததே தவிர நியாய-தர்மத்தைப் பொருத்ததில்லை.

53. காற்றும் தண்ணீரும் வெற்றிடத்தை அனுமதிப்பதில்லை என்பதுபோல வாழ்க்கையும் வெற்றிடத்தை அனுமதிப்பதில்லை. ஒருவர் கவனக்குறைவாக இருக்கும் இடத்தில் உடனே வாழ்க்கை அவருக்குண்டான வேலை, வருமானம், உடைமை போன்ற எல்லாவற்றையும் அவற்றைக் கவனிக்க முன்வரும் அடுத்தவருக்குக் கொடுத்துவிடுகிறது.

54. வருகின்ற வாய்ப்பை ஏற்க முன்வாராதவர் அதை மட்டும் இழப்பதோடன்றி, ஏற்கனவே தம் கையிலிருப்பதையும் சேர்த்து இழக்கின்றார்.

55. நம்முடைய கடந்தகாலத் தவறுகளையும், தோல்விகளையும் சமர்ப்பணம் செய்யும்பொழுது நம்முடைய வாழ்க்கைச் சூழலை அச்சமர்ப்பணம் சரி ஆக்குகிறது. பழுதான மெஷின் ரிப்பேர் செய்வதன்மூலம் எப்படிச் சரி ஆகின்றதோ அம்மாதிரியே சமர்ப்பணம் நம் வாழ்க்கையைப் பழுது பார்க்கிறது.

56. சுதந்திரமும் கட்டுப்பாடும் எதிரானவைகளாகும். இருந்தாலும் இவற்றைச் சமவிகிதத்தில் நம் வாழ்க்கையில் பயன்படுத்தினோம்என்றால் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று பரஸ்பரம் அனுகூலமாக இருந்து நாம் சாதிக்க உதவும்.

57. வாழ்க்கை என்பது ஒரு முன்னேற்றமான இயக்கமாகும். அதன்படி பார்க்கும்பொழுது நமக்கு இரண்டு வாய்ப்புகள்தாம் உள்ளன. ஒன்று நாம் முன்னேறிக்கொண்டே போகலாம் அல்லது கீழே இறங்கிக்கொண்டும் போகலாம். இப்படி முன்னேறாமலும், பின்னிறங்காமலும் இருக்கும் இடத்திலேயே தொடர்ந்து இருப்பதற்கு வாழ்க்கை அனுமதிப்பதில்லை.

58. ஒற்றுமை மற்றும் வித்தியாசம், இயக்கம் மற்றும் ஓய்வு, வரவு மற்றும் செலவு, ஒத்துழைப்பு மற்றும் போட்டி, கொடுக்கல் மற்றும் வாங்கல், இன்பம் மற்றும் துன்பம் - இவையெல்லாம் எதிர்மறைகளாகத் தெரிந்தாலும் உண்மையில் இவ்விரட்டைகள் எல்லாம் பரஸ்பரம் ஒன்றுக்கு ஒன்று உதவும் உடன்பாடுகளாகும்.

**59.** கிணற்றில் இருக்கின்ற நீரை நாம் வெளியேற்றும்பொழுது ஊற்று கிளம்பி மீண்டும் கிணறு நிரம்புவதைப்போல கையிலிருக்கின்ற பணத்தை நாம் செலவழித்தால் மேற்கொண்டு பணம் நம்மை நாடி வரும்.

**60.** நாம் ஒரு நல்ல காரியம் செய்தால் அதற்கு நன்றியறிதலான ஒரு ரெஸ்பான்ஸ்தான் வரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை; நன்றிகெட்ட ரெஸ்பான்சும் வரலாம். ஒரு செயல்பாட்டிற்கு எதிர்ச்செயல்பாடு இருக்க வேண்டும் என்ற விதிக்கு ஏற்ப நம்முடைய செயல்பாட்டிற்கு ஒரு எதிர் செயல்பாடு கண்டிப்பாக வரும். அது நன்றியறிதலாகவும் இருக்கலாம், நன்றி கெட்டதனமாகவும் இருக்கலாம். இரண்டுமே எதிர்ச்செயல்பாடுகள் தான்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

செயல், ஜீவன் பெற்று, ஒளிமயமாகி, சக்தியால் நிரம்பினால் சைத்தியப்புருஷன் வெளிப்படும். அதுவே 4th dimension ஆன்மீக அம்சம் பெறுவதாகும்.

***சைத்தியப்புருஷன் நம் காலத்தைக் கடந்தவன்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நன்றும், தீதும் ஒன்றெென அறியும் நேரம், இந்த ஞானம் பிறக்கிறது. அது தீமையைக் கரைத்து நன்மைக்கு எதிரில்லை என்றாக்குகிறது.

***தீமை எனும் நன்மையைக் காணும் சத்தியஜீவியம்.***





**P.75 And Nature's correspondence with the soul are written in the mystic heart of Life.**

**இறைவனோடு இயற்கையின் பொருத்தம்**
**வாழ்வின் இதயத்தில் வரிவடிவம் பெற்றுள்ளது.**

✡ ஆன்ம நினைவெனும் ஆதர்சக் கண்ணாடியில்,
ஒளிபொருந்திய குறிப்புகளைக் கண்டெடுத்தான்.
கோழிக்கிறுக்கெனும் கோட்டின் ஒளியில்,
முன்னுரையும் மூலக்கருத்தும் தப்பி எழுந்தன.
இகவாழ்வை நடத்தும் இருண்ட ஒப்பந்தம்.
ஜடமான இயற்கையின் இருளான தூக்கம்.
பூரணனுக்குப் புது உடையளிக்கும் முயற்சி.
மீண்டும் படித்து, புதியதாகப் புரிந்துகொண்டு,
வினோதமான குறியீடுகளும், கலைந்து கிடக்கும் சிக்கல் அடையாளங்களும்,
புதிரின் கட்டவிழ்த்து, அசரீரியாகப் பேசி,
கண்ணை மூடிய நிபந்தனைகளும், கிண்டல் செய்யும் சொற்களும்,
சத்தியத்தின் சதுரங்கம் ஆழ்ந்த தலைகீழ் திருப்பம்.
அவை அவசியமென அறியும் ஞானம்.
பெருநெறிக்குரிய கடின நிபந்தனைகள்.
இயற்கையின் பிரம்மப் பிரயத்தனம்.
போர்முனையின் ஞானம் போதிக்கும் திட்டம்.
தெய்வத்தை எதிர்க்கும் சட்டம்.
இணைபிரியாத முரண்பாட்டின் முடிவில்லாத பட்டியல்.
பிரபஞ்ச நிஷ்டையிலிருக்கும் ஊமை உமாதேவி,
சிருஷ்டியின் ஆனந்த வலியை அவசியமாகப் பயன்படுத்தி,

**ரூபம் ஜனிக்க அரூபியின் அனுமதி,**
**எதையும் சாதிக்கும் ஏற்றமிகு திறமை,**
**ஜடமும் இருளான உலகில் அறியும் அவா,**
**மரணத்தின் சாம்ராஜ்யத்தில் வாழும் வண்ணம்,**
**உடலின் பற்றான பாசப் பிடிப்பில் அமிர்த ஊற்றை நாடும் மனம்.**
**ஆத்மா தலையெடுத்து ஆவன செய்யும் அமைப்பு.**
**உயிரும் மூச்சும் உழலும் உலகில் அதிசயப் பிறப்பு.**
**இருளோடு இறைவன் இணைந்தெழுதிய நிர்ணயம்.**
**பிரபஞ்ச மனம் அமைதியின் குரலை அடுத்த முறையும் எழுப்பும்.**
**பிரம்மம் கொடுத்த வாக்கின் பிரயத்தனம்.**
**உலகின் உணர்ச்சி உந்துதலாகி,**
**மரணத்தில் பிறப்பு குரலெழுப்பி,**
**காலமெனும் கஷ்டத்தின் பாயிரம்.**
**ஆழத்தில் உலகம் புதைத்த இரகஸ்ய ரோஜா.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

விஷய ஞானம் (conceptual understanding) என்பது ஞானத்தின் ஒரு பகுதி. சொற்களின் ஆதியைத் தெளிவாக அறிவதால் பெறக்கூடியது. சொற்களின் ஆதியை அறிவது போல் கருத்தின் ஆதியையும் அறிந்தால் விஷய ஞானம் பூர்த்தியாகும்.

***கருத்தின் ஆதியை அறிந்தால் விஷய ஞானம் பூர்த்தியாகும்.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**899) நம்பர் போடுவதில் குறை ஏற்பட்டால், மனம் ஏற்றுக் கொள்ளும் பொறுப்பை, செயலில் பூர்த்திசெய்யும் திறனை அதற்குரிய சிறப்புடன் பெறவில்லைஎனப் பொருள்.**

***மனம் ஏற்றதை செயல் ஏற்பது அரிது.***

✡ *மனம் உயர்வாக இருந்தாலும் செயல் அதற்கேற்ப இருப்பதில்லை. இது இயற்கையில் உள்ள இடைவெளி.*

✡ *நமது திறமையை கையெழுத்து காட்டும், சமையலில் உப்பு பதம் காட்டும், அரசியலில் சமயோசிதம் காட்டும்.*

✡ *கையெழுத்து ஒரு கலை. மனிதனுடைய ஆழ்ந்த சுபாவத்தை அது தவறாமல் காட்டக்கூடியது. வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளியுண்டு. அதைத் தவறாது போடுபவர் உண்டு. தவறாது போடாதவருண்டு. சில சமயங்களில் போடுபவரும் உண்டு.*

- ❀ *தவறாது முற்றுப்புள்ளி வைப்பவர் எடுத்த காரியத்தில் முழுக் கவனமாக இருப்பார். முடியும்வரை மனம் வேறெதிலும் செல்லாது. முடிந்தபிறகும் அதை உறுதிப்படுத்திக்கொள்வார். வேலைக்குப் பொறுப்பானவர் இவர்; பிறரிடம் உள்ள பொறுப்பு வேறு; வேலையில் உள்ளது வேறு. வேலையென ஏற்றால், அதில் முழுப்பொறுப்பு வகிக்கும் சுபாவமுள்ளவர்.*
- ❀ Initial *முதலெழுத்து* M. Kalyanam *என்றால்* M *என்ற எழுத்தை* initial *என்கிறோம். கல்யாணம் என்பவர் முருகன் மகன் என்பதை* M *என்ற* initial *குறிக்கிறது. தகப்பனார் செல்வாக்குள்ளவரானால்* M *பெரியதாக இருக்கும். தகப்பனார் படிக்காதவரானால்* M *சிறியதாக அமையும். வீட்டைவிட்டு தகப்பனார் கொடுமையால் ஓடி வந்தவர்* M *என்ற எழுத்தை எவ்வளவு சிறியதாக எழுத முடியுமோ அவ்வளவு சிறியதாக எழுதுவார்.* Signature

கையெழுத்துப் போடும்பொழுது அந்த M என்ற எழுத்தைக் கண்டுபிடிக்க முடியாதபடி பெயருள் மறைந்திருக்கும். ஒரு IAS ஆபீசர் தகப்பனாருடன் கோபப்பட்டுத் தம் signatureஇலிருந்து initialஐ எடுத்துவிட்டார். கலப்புத் திருமணம் கலாட்டாவில் நடந்து அதில் பிறந்த மகன் initial போடுவதில்லை. அவர் தம் பெற்றோர் செய்ததை மறுப்பதை இப்படிக் காட்டுகிறார். முழுச் சுயநலமிகள் signatureஐச் சுற்றி ஒரு வளையம் போடுவார்கள். தன்னைப் பற்றி அதிக அபிப்பிராயமுள்ளவர்கள் தன் signatureஇல் முதலெழுத்தைப் பெரியதாக எழுதுவர். அப்படிப்பட்ட ஒருவர் initial போலத் தம் பெயரின் முதலெழுத்தை 5 மடங்கு பெரியதாகப் போடுவார். வாழ்க்கை முன்னேற்றம் ஏற்பட்டாலும், மனம் அடங்கினாலும், அன்னையை அதிகமாக ஏற்றாலும், தோல்வி மேல் தோல்வி வந்தாலும் பெரிய முதலெழுத்து குறுகி இருந்த இடம் தெரியாமல் போகும்.

❀ இதுபோன்று கையெழுத்து handwritingஇல் கண்டுபிடிக்கப்பட்டவை சுமார் 300க்கு மேற்பட்ட கருத்துகள்.

❀ பெயர்களின் கீழ் கோடு போடுபவர் பிரபலம் நாடுபவர்.

பெயரைத் தொடர்ந்து எழுதுபவர் வேலையை நிறுத்தாமல் முடிப்பவர்.

❀ அதுபோல் நம்பர் போடும்பொழுது எழும் குறை ஏற்ற வேலையைச் செய்ய மனமில்லை எனக் காட்டுகிறது.

❀❀❀

## 900) (Form) உருவம் ஏற்படாமல் (content) உள்ளுணர்வு சிதறிப் போகும். உருவம் அழிந்து பதிந்தால் உள்ளுணர்வு கசங்கிவிடும்.

*ரூபமற்ற சக்தியில்லை. ரூபம் நீடித்தால் சக்தியழியும்.*

✡ உருவம் உயிரைக் காப்பாற்றும்.

✡ உருவமில்லாமல் உயிர் இருப்பது ஆவி; உடலன்று.

✡ உயிரில்லாமல் உருவம் சிறப்பானால், படிக்காதவன் பட்டமளிப்பு விழா உடையை ஏற்பதுபோன்றது.



✡ அது மானம் போகும் செயல்; ஜெயிலுக்கும் அழைத்துப்போகும்.

✡ **உருவத்திற்கும் உள்ளுணர்வான உயிருக்கும் என்ன தொடர்பு?**

✡ உயிர் முதலில்; உருவம் இரண்டாவது.

✡ உருவமின்றி உயிரில்லை; உயிரின்றி உருவமில்லை.

✡ கருவில் குழந்தை உருவாவதையும், முட்டை உருவாவதும் தெளிவு படுத்தும்.

✡ எது முதல் என்பதைவிட எது எதை எப்படி ஆதரிக்கிறது என்பது முக்கியம்.

✡ பொதுவாக அழகை நாம் உருவம்என அறிவோம்.

✡ உள்ளே ஜீவன் பவித்திரமானால் புறத்தில் அழகு சேரும்.

✡ புறஅழகு அகத்தூய்மையை வெளிப்படுத்தும்.

அதுவே ஆரம்பக் கால நிலை, நிபந்தனை எனலாம்.

பரிசைப் பெட்டியில் வைத்துக் கொடுக்கும் பழக்கம் வந்தபிறகு பரிசு இல்லாமல் பெட்டி ஏற்படுகிறது.

அகத்தூய்மையால் புறஅழகு வந்து நிலைத்த பல தலைமுறைகட்குப் பின் அகமும், புறமும் பிரிய முடியும்என்ற நிலையும் வருகிறது.

அகமின்றி எழும் புறம் அர்த்தமற்ற சொல்லாகும்.

குணமில்லாத பெண்கட்கு அழகு இருந்தால் அவ்வழகு கர்வமாக மாறும்.

தன்மையில்லாத ஆணுக்கு அழகு அமைந்தால் அவன் பெண்கள் வாழ்வை சிதைக்க முடியும்.

புறம் பொலிவு பெறாமல் அகம் ஆழ்ந்திருந்தால் அகம் நிறையும், ஆனால் வாழ்வில் அது மிளிராது.

குணமும், தன்மையும், செயலாகவும், நிகழ்ச்சியாகவுமாக மாறி ஜீவனின் சக்தி வெளிப்படுகிறது.

குணமும், தன்மையுமற்ற அகம் செயலாக, சக்தியாக மாறினால் அந்த ஜீவன் பேயாகி, பிசாசாகி, பிறரை அழிக்கும் சக்தியாகும்.

**பிறரை அழிக்கும்வாயிலாகத் தன்னையே அழித்துக்கொள்வான்.**

விகாரமான குணவான், அழகான குணம்கெட்டவன் அபூர்வம்.

*பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய தோற்றம் ராஜகம்பீரம் என வர்ணிக்கப்படுகிறது. எந்த அரசனும் பெற்றிராத பொன்மேனியான பொன்னொளி அவருடையது. அவர் அகம் சத்தியஜீவியம். அதன் புறம் இதுவரை மனிதன் பெறாத கம்பீரம்.*

*தொடரும்.....*

❀❀❀

### ஜீவிய மணி

**அறிவிலும் அறியாமையிலும் உள்ளது பிரம்மம்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மாறிய பார்வை, மனத்தின் பிரச்சினைகளைக் கரைக்கிறது. உணர்வில் மாறிய நோக்கம் உள்ளத்தைப் பூரிக்கச் செய்யும். உடல் உணர்வு (physical sensitivities) மாறினால் உள்ளும் புறமும் திருவுருமாற்றம் உண்டு.

***உடல் திருவுருமாறும் உள்ளுணர்வு.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

விழிப்பு ஏற்பட்டபோதெல்லாம், நிரந்தர அருள் தடையின்றி வயப்படுகிறது. அருள் நம்மை நாடி வருவது திருவுருமாற்றத்திற்கு வழிசெய்யும். ஆர்வம் திருவுருமாற்றத்தைப் பூர்த்தி செய்யும்.

***நிரந்தர விழிப்பின் ஆர்வம் அருளின் நிரந்தர திருவுருமாற்றம்.***





# மலரும் மணமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**மகேஸ்வரி**

## அணுவில் அமைதி:

“முல்லை, நீ மட்டும் நேற்று பணம் கட்டாவிட்டால் என் நிலைமை என்னவாகியிருக்கும்?” என்றாள் செண்பகம்.

நேற்று நடந்த விஷயங்களை, செண்பகத்திடம் முழுவதுமாகச் சொன்ன முல்லை,

“இந்தா, இந்தப் பூவை தினமும் எப்பாடுபட்டாவது கொண்டுவந்து உன் முன்னால் வைத்துகொள். இல்லையென்றால் தலையில் வைத்துக் கொள். இதன் பெயர் விருட்சிப்பூ. இட்லிபோல் உள்ளதால் இட்லிப்பூ என்றும் சொல்வார்கள். ஆங்கிலத்தில் Ixora என்பார்கள். உனக்கு வீட்டில் இருக்கும் டென்சனுக்கு இது ஒன்றுதான் மருந்து. இதைவிட சிறந்ததை வேறு யாராலும் தர முடியாது. இதை வைத்துப் பார். வீட்டிலுள்ள மாமியார் பிரச்சினை தீருகிறதோ இல்லையோ, ஆனால் உன் மனதில் அமைதி பிறக்கும். அப்பொழுது அவர்கள் ஏதாவது சொன்னால்கூட பெரியதாக உனக்கு ஒன்றும் தோன்றாது. அதையே மனதில் வைத்துக்கொண்டு வேலையில் கவனத்தைச் செலுத்த முடியாமல் தடுமாறவும் தேவை இருக்காது”.

“இந்தப் பூவிற்கு இவ்வளவு மகிமையா?”

‘‘அனுபவித்ததைத்தான் சொல்கிறேன். உன் அறிவைக்கொண்டு கணக்கு போடாதே. சில நேரங்களில் மட்டும்தான் அது வழிகாட்டும். ஆனால் அது காட்டும் வழியும் அரைகுறையாகத்தான் இருக்கும். ஏனெனில் அதற்கு ஒரு பக்கம்தான் பார்க்கத் தெரியும். அறிவிற்கு மேற்பட்டது ஒன்றுண்டு. அதற்கு என்ன பெயர்என்று தெரியாமல் இருக்கலாம். சிலர்

ஆன்மா என்பார்கள்; உள்ளுணர்வு எனலாம்; நான் சைத்தியப்புருஷன் என்பேன். அது காட்டும் வழியில் போகக் கற்றுக்கொண்டால், சிக்கல் ஏதும் வாராது. நீரோட்டத்துடன் போகும் படகைப்போலச் சுகமாகக் கரை சேர்ந்துவிடலாம்".

"செண்பகம், எனக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது. வருகிறாயா காபி சாப்பிட்டுவிட்டு வரலாம்?"

"இந்தா இதுதான் காபி" என்று தன் முன்னால் நீட்டப்பட்ட சிறிய பந்துபோன்ற அழகிய வெள்ளைநிற மலர்ச்செண்டை கையில் வாங்கிய லில்லி, "இதுவா காபி!"

"இதைக் கையில் வைத்துக்கொள். காபி சாப்பிட்டால் எப்படி தலைவலி தீருமோ அதைவிடச் சீக்கிரமாக உன் தலைவலியை நீக்கிவிடும்".

"ஓகே மேடம்", என்று கையில் வாங்கிய மலரைத் திருப்பி, திருப்பி பார்த்துக்கொண்டே சென்ற லில்லி, பத்து நிமிடங்களுக்குப் பின்னால், "முல்லை, முல்லை! அதிசயம்! ஆனால் உண்மை! என் தலைவலி போய்விட்டது. காபி + டிஸ்பிரினுக்கு மட்டுமே அசையும் என் தலைவலி இந்தப் பூவால் போய்விட்டது. என்னால் நம்பவே முடியவில்லையே! எனக்கு இந்தப் பூ தினமும் வேண்டுமே".

"ஆமாம், தலைவலி மட்டும்தான் போகுமா, இல்லை எந்த வலி என்றாலும் போய்விடுமா?"

"எனக்குத் தெரிந்தவரையில் உடலின் அணுக்களில் ஏற்படும் அமைதிக் குறைவினால்தான் வலி ஏற்படுகிறது. அதனால் எந்த வலியாக இருந்தாலும் இந்தப் பூ அதை நீக்கிவிடும்".

"காது வலியைக் கூடவா?"

"ஏன் சார், காதில் வைத்துப் பார்த்தால் தெரிந்துவிடுமே".

"நம்பிக்கையுடன் வைத்தால் உடலிலுள்ள எந்த வலியும் போகும். ஏனென்றால் நம் உடம்பு பல அணுக்களால் ஆனது. அவ்வணுக்களில் ஏற்படும் சுமுகக் குறைவினால்தான் வலி ஏற்படுகிறது. அதனால் விருட்சிப் பூவுடன் கொடி ரோஸையும் சேர்த்து வைத்தால் சுமுகம் ஏற்பட்டவுடன் அமைதியும் சேருவதால் உடனடியாக வலி நீங்கிவிடும்".

"எனக்கு ஏதாவது சொல்லேன் முல்லை. இந்தப் பணம் கிடைத்ததற்கு ஆயிரம் தடவை உனக்கு நன்றி சொல்லலாம். என் பிரச்சினைக்கு ஏதாவது வழி இருக்குமா? வீட்டை நினைத்தாலே வயிற்றை யாரோ பிசைகிறாற்போல



இருக்கிறது. சாயந்திரம் நெருங்க நெருங்க வீட்டிற்குப் போகவேண்டுமே என்று இருக்கிறது. நீ பரவாயில்லை. உன்னைப்போல் நானும் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆனால் அதற்கும் ஒரு தைரியம் வேண்டும். அதுவும் என்னிடம் கிடையாது. அம்மா வீட்டிற்குப் போய் இருக்கலாம் என்றால் அதுவும் முடியாது. ஏதோ என்னை விட்டுப் பிரிய மனமில்லாதவர்போல என் வீட்டுக்காரர் வந்துவிடுவார். அவரைப் பொருத்தவரையில் சாப்பாட்டுச் செலவு மிச்சம்; அதை பேங்கில் சேமித்து வைக்கலாமேஎன்ற ஆசை. அவரிடம் அவர் அம்மாவைப் பற்றிச் சொன்னாலும் சின்ன வயதில் தன்னைப் படிக்க வைப்பதற்காகப் பட்ட சிரமங்களைச் சொல்ல ஆரம்பித்துவிடுவார். வயதானவர்கள்; நான் அனுசரித்துப் போகலாம் என்றால், நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம், நான் மருமகளாக இருப்பதே குற்றம் என்று பழகுகிறவர்களிடம் நான் எப்படித்தான் இருப்பது? உன் மதர் எனக்கு ஏதாவது வழிகாட்டுவார்களா?

"அதென்ன உன்மதர், என்மதர் என்று சொல்கிறாய். நம் எல்லோருக்கும் அவர்கள் மதர். பிரச்சினையை உன் கண்ணோட்டத்தில் பார்க்கின்றாய். அதனால் உனக்கு அது பெரியதாக இருக்கிறது. உன் மாமியார் கண்ணோட்டத்தில் என்றாவது நீ யோசித்துப் பார்த்திருக்கிறாயா?"

"நீ சொல்வாய்; உனக்கென்ன தெரியும் என் பிரச்சினையைப் பற்றி? உன்னிடம் கொஞ்சம்தான் சொன்னேன். எனக்குத் திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் ஆகின்றனஎன்று உனக்குத் தெரியுமா? குழந்தை இல்லை என்றும் தெரியுமல்லவா? ஆனால் உனக்கொரு முக்கிய விஷயம் தெரியாது. அவர் தம் அம்மாவுடன்தான் படுத்துக்கொள்கிறார். அவர் அம்மாவிற்கு பயம். எனக்கொரு குழந்தை பிறந்தால் தன் பையனுக்கு தன் பிள்ளைமீது பாசம் வந்துவிடும். தன்னை விட்டு ஒதுங்கிவிடுவான் என்பதற்காகச் செய்கின்ற வேலையிது. இது அந்த மனிதனுக்கு சொன்னாலும் புரியாது. எதற்காக கல்யாணம் செய்துவைத்தார்கள்என்று பல தடவை யோசனை செய்திருக்கிறேன். பிறகுதான் புரிந்தது 'சம்பளம் கொடுக்கின்ற' வேலைக்காரி தேவைப்பட்டிருக்கிறதென்று".

"இப்பொழுது நீயே உன் மாமியார் பிரச்சினையைச் சொல்லிவிட்டாய். அவருக்கு பயம். அந்த பயம்தான் உன்னிடம் வேறுவிதமாக வருகின்றது.

"மல்லிகை, இன்றைக்கு ரோஜாக்கா வீட்டில் தைரியத்தை வைத்து இருக்கின்றார்களா?"

"உனக்கெப்படி முல்லை தெரியும். போனில் ஏதும் சொன்னார்களா?"

"நீ நேற்று வழக்கம்போல் அந்திமல்லியைப் பற்றி சொன்னாய். இன்று செண்பகம் தன் கதையைச் சொன்னாள். நான் அதை அன்னையிடம் சொன்னேன். இவர்கள் இருவருக்கும் 'தைரியம்' தேவை. நம் வீட்டைவிட ரோஜாக்கா வீட்டில்தான் பூவிற்கு அதிகம் மதிப்பு கொடுப்பார்கள். அதனால் நம் வீட்டைத் தேடி தைரியம் வரப்போவதில்லை. நிச்சயமாக இன்றைக்கு மாமா பூ தேடப் போகும்பொழுது அவருடைய கண்ணில் எருக்கம்பூவை அன்னை காட்டியிருப்பார்கள். அக்காவும் அதைப் பூத்தொட்டியில் வைத்து இருப்பார்கள்".

"எவ்வளவு நம்பிக்கையுடன் தீர்மானமாக நடந்ததைப் பார்த்ததைபோல் சொல்கின்றாய்?"

"எனக்கு அன்னையைப் பற்றி இந்த விஷயத்தில் கொஞ்சம் தெரியுமே! நாம் நினைத்தவுடன் நமக்குத் தேவையான மலர்களை நம்மைத் தேடிவரச் செய்துவிடுவார்களே!" என்று முல்லை கூறியவுடன் காலிங்பெல் அடித்தது.

"மல்லிகை, இந்தா தைரியம். உன் அக்கா கொடுத்து வரச் சொன்னாள். நான் வரட்டுமா".

'பார்த்தாயா' என்று முல்லை தன் சகோதரியைப் பார்த்தாள்.

அந்திமல்லி வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். முகத்தில் திருப்தியும், சந்தோஷமும் பொங்கி பூரித்திருந்தது. 'இனிமேல் எனக்கு எந்தவொரு கவலையுமில்லை. அன்பான கணவர். அருகிலேயே மனம்விட்டுப் பேச தோழி. ஆபீசின் சூழ்நிலையும் நன்றாக இருக்கிறது'.

"ஹப்பா, இனிமேல் பயப்பட எந்தவொரு காரணமும் இல்லை" என்று கணவரிடம் மகிழ்ச்சியுடன் கூறினாள்.

"நீயாக எதையாவது நினைத்து பயப்படுகின்றாய். பயம் என்பது தொத்துவியாதிபோன்றது. ஒன்றை நினைத்தால் போதும், ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஏதாவது ஒன்றுடன் சேர்ந்து உன்னை பயமுறுத்தும்".

"மல்லிகை எனக்கு எருக்கம்பூ கொடுத்திருக்கின்றாள். அதற்கு '**தைரியம்**'என்று பெயர்என்றும், அதைக் கையில் வைத்திருந்தால் தைரியம் தானாகவே உற்பத்தியாகும்என்றும் கூறினாள்".



"உனக்கு தைரியம் வந்தால் சரி! எந்தப் பூவை வேண்டுமானாலும் வைத்துக்கொள்" என்றான் சந்திரன்.

விடிந்தும் விடியாதபொழுது சந்திரனின் மயக்கத்தில், சூரியனின் கதகதப்பை எதிர்நோக்கி காத்துக்கொண்டிருந்த சமயம்.....

சந்திரனின் செல்போன் சிணுங்கியது.

தூக்கக்கலக்கத்தில் messageஐப் பார்த்த சந்திரன்,

"அந்திமல்லி, உடனடியாக நான் அப்போலாவிற்குச் செல்ல வேண்டும். அவசரமாக 'A' positive தேவைப்படுகின்றது. போய் கொடுத்துவிட்டு வந்துவிடுகின்றேன்".

திடுக்கிட்டெழுந்த அந்திமல்லி,

"வேண்டாமே" என்று தடுத்தாள். "எனக்கென்னவோ பயமாக இருக்கின்றது. மனது சரியில்லை" என்றாள்.

"ஓர் உயிர் காக்க என் இரத்தம் தேவைப்படுகின்றது. இந்த நேரத்தில் படித்த நீயே பயப்படலாமா? இரத்தம் கொடுப்பதில் எந்தவொரு கெடுதலும் வாராது. வீணாகப் பயப்படாதே!"

கையிலிருந்த எருக்கம்பூவை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டாள். உடல் நடுங்கியது.

*தொடரும்....*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வு நிலைக்கு மேற்பட்ட முன்னேற்றம் பிரச்சினை அற்றிருக்கும். அல்லது நம் சக்திக்குட்பட்டு முயற்சி அமையும். வாழ்வு நிலையை முன்னேற்றம் மீறினால் சக்திக்குட்பட்ட முயற்சியானாலும் பிரச்சினை எழும்.

***நிலையை மீறிய முன்னேற்றம் பிரச்சினை தரும்.***

# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**48. வெட்கத்தைக் கடந்த மனநிலையை நாடு.**

கோபிகைகள் வெட்கத்தைவிட்டு கிருஷ்ணனை நாடினர்.

மனிதன் விலங்காக இருந்து மனிதனாக மாறியபொழுது முதலில் பெற்ற உணர்ச்சி வெட்கம்.

இறைவனுக்கும், மனிதனுக்கும் உள்ள தடைகள் சொத்து, குடும்பம், பாசம், தர்மம், ஆசை என்பவை. வெட்கம் அவற்றைக் கடந்தது.

அனைத்தையும் விடலாம். வெட்கத்தை விட முடியாது.

அதையும் விட்டவனுக்கே இறைவன் தரிசனம் உண்டு.

இதை ஏற்கும் மனம் பெரியது.

இதே கருத்தை வாழ்வை இலட்சியமாக நடத்துபவனுக்குப் பொருத்திக் கூறுவது இக்கட்டுரை.

வெட்கப்படுபவர்க்கு மேடையில் நின்று பெறுபவையில்லை.

பலரைச் சந்திக்க உடல் வெட்கப்படுபவர்க்கு அப்பிரபலமில்லை.

அடுத்த நிலையில் உணர்ச்சியின் வெட்கம்.

பசுவிற்குத் தண்ணீர் வேண்டும்எனக் கேட்பதும் நாவிற்கு வெட்கப்படக் கூடிய குறை என்பது குறள். அது நம் வேதம்.

அனுசுயாவும் தன் வெட்கத்தைக் காப்பாற்றும் வகையில் திருமூர்த்தி-களை வென்றாள்.

சுதந்திர இயக்கத்திற்குப் பணம் வசூல் செய்ய வெட்கப்பட்டிருந்தால் சுதந்திரம் வந்திருக்காது.

1920 வாக்கில் குடும்பப் பெண்கள் பாட, கூச்சப்படுவார்கள். நடனம் ஆடுவது என்ற பேச்சேயில்லை. அது தேவதாசிக்குரியது என்பது அன்றைய கருத்து.



ருக்மணி அருண்டேல் அதை மீறி கலையை வளர்த்ததால் இன்று நடனக்கலை வீடுதோறும் முழங்குகிறது.

எந்த இலட்சியத்தை நிலைநாட்டவும் வெட்கம் தடை.

எவரும் செய்யாதவற்றைச் செய்ய வெட்கப்படுபவருக்கு எந்த இலட்சியமும் இல்லை.

அன்னை முறைகளும், வழிகளும் எவரும் பின்பற்றாதவை.

அவற்றுள் சிலவற்றைப் பின்பற்ற வெட்கப்பட வேண்டும்.

திருமண விழாவுக்குப் போய் வந்தபின் 1 ஆண்டு தியானம் கரையும். இருந்தாலும் உறவினர் அவசியம் என்பவருண்டு.

1 ஆண்டு தியானப்பலனை இழக்க விரும்பாவிட்டால் திருமணங்-களுக்குப் போக முடியாது. போகாமல் சமூகத்தில் பழக வெட்கப்பட வேண்டும்.

திருமண விழாவிலும் தியானப் பலனழியாமலிருக்கும் நிலை அரிது.

திருமணங்கட்குப் போகாவிட்டால் பலரும் பலவகையாக நினைப்பார்கள்.

அவை மானம் போகும் விஷயங்களாகவுமிருக்கும்.

'இவரை எவரும் அழைக்கமாட்டார்' எனவும் நினைப்பார்கள்.

வெட்கத்தைக் கடந்த மனநிலை வாராமல் வெளியுலகில் தைரியமாகப் பழகமுடியாது.

மனம் வெட்கத்தைக் கடந்தால், வெட்கப்படக்கூடிய நிலை எழாது.

**49. விரயத்தை விலக்கு.**

பொருள்கள், சக்தி, நேரம், இடம், வாய்ப்பு ஆகியவற்றின் விரயத்தை முழுவதும் விலக்கியவர் வருமானம் இரண்டு மடங்காகும்.

உண்மையில் 10 மடங்காகும்.

18 ரூபாய் 80 பைசாவுக்கு வாங்கக்கூடிய பொருளை 18 ரூபாய் 90 பைசாவுக்கு வாங்காத மனநிலை விரயத்தை விலக்குவது.

நாம் வழக்கமாகச் செய்யும் வேலைகளுக்குத் தேவைப்படும் நேரத்தைக் குறித்து அவற்றைக் குறைக்க முயல்வது ஒரு முறை.

குளிக்கும் நேரம் 25 நிமிஷமானால், எதையும் விலக்காமல் கவனமாகக் குளித்தால் 25 நிமிஷம் சுருங்கும். 1 மாதம் கழித்து 25 நிமிஷம் 15 நிமிஷமாவது தெரியும். அந்த 10 நிமிஷம் எனக்கு என்ன செய்யும் எனக் கேட்பதைவிட 1 மாதம் இதுபோல் எல்லா வேலைகளையும் efficient திறமையாக மாற்றினால் தினமும் 11½ மணியில் முடிந்த வேலை 8½ மணியில் முடியும். அதற்குள் வருமானம் 2 அல்லது 5 மடங்கு உயர்ந்திருப்பதைக் காணலாம்.

Energy சக்தியை அப்படிக் கவனித்தால், மற்ற எல்லா விஷயங்களிலும் விரயம் அறவே விலக்கப்பட்டால் முடிவில் நம்நிலை அடுத்தக் கட்டத்திற்கு வரும். 5 ஆண்டுக்குப்பின் வரவேண்டிய பிரமோஷன் இப்பொழுது வரும். Pay scale மாறி சம்பளம் கணிசமாக உயரும். முனிசிபல் கௌன்சிலர் பதவியை மனம் நாடும்பொழுது MLA சீட் கிடைக்கும்.

- ❀ விரயத்தை விலக்க எடுக்கும் முயற்சி முழுமுயற்சி.
- ❀ இம்முயற்சி நம் திறமையை உயர்த்துவதுடன் நம் பர்சனாலிட்டியையும் உயர்த்தும்.
- ❀ நம் மனம் உயர்ந்த அளவுக்கு வாய்ப்பு நம் சூழலில் இல்லையெனில் நம்மை வேறு இடம் கொண்டுபோகும்.
- ❀ விரயத்தை விலக்கும்பொழுது நாம் பொருள்கட்கு முடிவான கவனம் செலுத்துகிறோம்.

**கவனம் கடவுளின் பொறுப்பு.**

- ❀ ஒரு விஷயத்தில் கிடைக்கும் பலன் கணிசமானது.
- ❀ எல்லா விஷயங்களிலும் கிடைக்கும் பலன் மிகப்பெரியது.
- ❀ விரயம் என்பது ஒரு தலைப்பு.

பல தலைப்புகளும் சேர்ந்து தரும் பலன் பிரம்மாண்டமானது.

பலனை நாம் இன்றுள்ள நிலையைக்கொண்டு நிர்ணயிக்க முடியாது.

திறமை உடலின் முயற்சி.

விரயத்தை விலக்க மனம் முயலவேண்டும்.



மனம் உடலைவிட ஏராளமாகப் பெரியது, முக்கியமானது.

விரயம் விலகிப் பலன் பெறாதவரில்லை.

திவாலான கம்பனி விரயத்தை விலக்கினால் இலாபகரமான கம்பனியாகும்.

இது சுலபமான முறை, பெரும்பலன் தரும்.

## 50. அளவுகடந்த அர்த்தமற்ற விரயத்திற்கு அர்த்தம் உண்டென அறியலாம்.

விரயத்தை விலக்கும் பலனை, விரயமும் தரும்என்பது ஆன்மீகச் சட்டம்; எதிரானவை உண்மை.

கட்டுப்பாடு பெரும்பலன் தரும்; சுதந்திரமும் அதே பலனைத் தரும்.

விரயம் செய்தால் எப்படிப் பலன் வரும்?

விரயம் உண்மை; பலன் வரும்என்பதும் உண்மை.

பலன் அதே நிலையில் வாராது; அடுத்த நிலையில் வரும்.

MPSC எழுதி சர்க்காரில் குமாஸ்தா ஆனவன் குமாஸ்தாவாகவே ஓய்வு பெற்றான். ஓயாது சூது ஆடுவான். சம்பளம் வீட்டிற்கு வாராது. மனைவி தன்தாயார் குடும்ப ஆதரவால் கடின வாழ்வை நடத்தினாள்.

இரண்டு பெண்கள் வயதிற்கு வந்தன.

இதுவரை சிறிய உதவிகளைச் செய்த தாயார் வீட்டில் இனியும் உதவி எதிர்பார்க்கும் நிலையில்லை.

மைத்துனனே இரு பெண்கட்கும் வரன் ஏற்பாடு செய்து அவன் செலவில் தலைக்கு 100 பவுன் சீர் செய்து பெரிய இடத்தில் திருமணம் செய்து வைத்தான்.

அதன்பிறகும் சூது தொடர்ந்தது.

சூது தவறு, விரயம் தவறு என்பதை மறுக்க முடியாது.

விரயம் (போகாறு) வெளியே போவதை அதிகப்படுத்துவதால், உள்ளே வருவது அதிகப்படும் என்பது ஒரு விதி. இன்று அமெரிக்காவில் விரயமாகும் உணவுப்பண்டம் ஒரு நாட்டைக் காப்பாற்றப்போதும் என்கிறார்கள்.

போக்கு அதிகமானால், வரவு அதிகமாகும் என்பது சட்டம்.

இதை நாம் புரிந்துகொள்ளலாம், பின்பற்ற முயலுதல் சரிவாராது.

அளவுகடந்த விரயம் அளவுகடந்து அழிப்பதைக் காண்கிறோம்.

அவர்கட்கும் ஆத்மாவில் அளவுகடந்த பலன் வரும்.

தத்துவத்தை அறிவது பலன் தரும்.

பின்பற்ற முயல விரும்பினால் அவர்கள் அறிய வேண்டியவை அதிகமாக உள்ளன.

இதை அரசியலில் அதிகமாகக் காணலாம்.

முறையாக உழைத்த தொண்டர், தொண்டர் தலைவராகி, MLA ஆவதுண்டு.

எந்த முறையையும் பின்பற்றாமல் சந்தர்ப்பம் கிடைத்தால் எந்தத் தலைவரையும் துரோகம் செய்து கட்சித் தலைவனாக வந்தவர் நிலையை ஆராய அரசியலோ, மனோதத்துவமோ போதாது; ஆன்மீக வாழ்க்கை விளக்கம் தேவை.

விரயத்தால் அழிந்தவர் பலர்.

விரயத்தால் பலன் பெற்றவர் சிலர்.

அதை அதிர்ஷ்டம் என்கிறோம்.

நமக்குப் புரியாததை அதிர்ஷ்டம் என்று கூறுகிறோம்.

அப்படிப் பலன் பெறுபவரிடையே ஆழ்ந்து ஒரு நல்ல value குணம் புதைந்திருக்கும்.

Life Response படிப்பவர் இதையறியலாம்.

எந்த உண்மைக்கும் எதிரான உண்மையுண்டுஎன்பது இவ்விஷயத்தில் உண்மை.

முதலாளி பெற்ற அதே பலனை அவன் தொழிலாளி பெறுகிறான்.

விரயம் பெரிய சாஸ்திரம்; எளிதில் படித்து முடிக்க முடியாது.



**51. நமக்குள்ள திறமையை நமக்கு மறக்குமாறு நடக்க வேண்டும் - நாமே பாராட்டினால் அது வளரும்.**

**நாம் பாராட்டாததைப் பிறர் பாராட்டுவர்.**

அழகானவர் தம்அழகை நினைந்து மகிழ்வார்.

ஏதோ காரணத்தால் தன்அழகை தான் உணருவதில்லையெனில் உலகம் அதைப் பாராட்டும்.

திறமைக்குப் பலன் உண்டு.

பலனை அதிகமாகக் கருதினால், திறமையைக் கருத முடியாது.

நாம் கருதாததைப் பிறர் கருதுவர்.

Silent willஇல் நாம் கூறாததைப் பிறர் கூறுவதும், இங்கு நாம் பாராட்டாததைப் பிறர் பாராட்டுவதும் ஒன்றே.

1947 முதல் 1977 வரை இந்திய சர்க்கார் ஆயிரம் துறைகளில் முயன்று எல்லாத் துறைகளும் வெற்றிடமாக இருந்ததால், செய்ய வேண்டியவை ஏராளம்.

எவ்வளவு செய்தாலும், செய்ய வேண்டிய பாக்கி ஏராளமாக இருந்தது.

சர்க்கார் தான் செய்ததை நினைக்க நேரமில்லை.

உலகம் இந்தியா செய்தவற்றைக் கூர்ந்து கவனித்துப் பாராட்டியது.

நம்மைப் பிறர் பாராட்ட வேண்டும் எனில் எந்தத் திறமைக்காகப் பாராட்ட நாம் நினைத்தாலும், அது நம்மனத்தை விட்டகன்றால் உலகம் பாராட்டும்.

**நாமே பாராட்டியபின் உலகம் பாராட்டாது.**

உள்ள திறமையை எப்படி அறியாமலிருக்க முடியும்?

**நம்திறமை ஒரு விஷயத்தில் 80%ஆனால் நாம் மேலும் பெற வேண்டியதை மட்டும் கருதினால், நாம் பெற்றதை நினைக்க முடியாது.**

இது சிறப்பின் தன்மை.

சிறப்படைய ஒருவர் முயன்றால் அவர் முயற்சிக்கு முழுசக்தியும் செலவாகும்.

அதனால் உள்ளதைப் பாராட்ட சக்தியிருக்காது.

என்னுடைய திறமை எவர் கண்ணிலும் படவில்லையென வாழ்நாள் முழுவதும் குறைபடுபவர், திறமையேயற்றவராக இருப்பார்.

சுமார் 1 பக்கம் தவறில்லாமல் ஆங்கிலம் எழுதத் தெரியாதவர், உடனுள்ள அனைவரிடமும் தம் ஆங்கிலப் புலமையின் பெருமையைப் பறைசாற்றினார். கேட்டவர் அனைவரும் விபரம் தெரியாதவர் என்பதால் அதை ஏற்றுப் பாராட்டினர். புலமைக்குச் சோதனைக் காலம் வந்தது.

அஸ்திவார அறிவுமற்றவர்என அம்பலமானார்.

தங்கள் திறமையைத் தாங்களே வியந்துகொள்பவர் எந்தத் திறமையும் அற்றவர்களாக இருப்பார்கள்.

உலகம் நம்மைப் பாராட்ட வேண்டியது நமக்கு அவசியமில்லை.

நாம் திறமையைப் பெறுவது அவசியம்.

பெற்றதை முழுமைப்படுத்தினால் அதைப் பெறலாம்.

அம்முயற்சி பெருவெற்றி பெறும்.

நம் சக்தியனைத்தும் அதில் செலவானால் நம்மால் நம்மைப் பாராட்ட இயலாது.

நாம் அதை மறப்போம்.

நாம் மறந்ததை உலகம் ஏற்கும்.

## 52. சுயநலமிக்குச் சேவை செய்யாதே.

சுயநலத்தை எவரும் விரும்பமாட்டார்.

பிறர் சுயநலத்திற்குச் சேவை செய்வது நாம் சுயநலமாக இருப்பதைவிடத் தவறு. ஏனெனில் அது வளரும்.

எதைக் கவனித்தாலும், பாராட்டினாலும் அது வளரும்.

எதுவும் அனந்தம்; சுயநலமும் அனந்தம்.

பிறர் சுயநலத்தை வளர்ப்பதால் வளர்வது சுயநலம். அது நல்லதன்று.

அப்படிச் செய்யும் சேவை அவருக்குத் தப்பபிப்பிராயம் தருகிறது.

**சுயநலம் தவறன்று, சரி என்ற முடிவுக்கு அவர் வருகிறார்.**



அவர் சுயநலத்தை நாம் வளர்ப்பதால், கரைய வேண்டிய நம் சுயநலம் நம்மைச் சுடும்.

வேலை செய்யாத வேலைக்காரனுக்குச் சம்பளம் கொடுத்தால் வேலையின் மனம் புழுங்கும். அதனால் நடந்துவரும் நல்ல வேலை கெடும்.

படிக்காத மாணவர்கட்கு மார்க் போட்டு பாஸ் செய்த பேராசிரியர் தம் மகன் படிக்க மறுப்பதைக் கண்டு திகைத்தார். அவர் தவறாகப் பாஸ் போட்டதில் பலன் பெற்றவன் படிக்காதவன். அதனால் படிக்காத பழக்கம் வளர்கிறது.

**அது அதிகமாகத் தன்வீட்டில் எழும் என்ற சட்டம் அவர் அறியாதது.**

திருமணமானவனுடன் வாழ விரும்பினால், அந்த விருப்பம் பூர்த்தி-யாகாமல் தனக்குத் திருமணமானபின் தன்எண்ணம் தன்வாழ்வில் வெளிப்படும்என அறிவதில்லை. இரண்டு திருமணம் தன்வாழ்வில் எழுவதின் அர்த்தம் புரியாது.

சுயநலம் கூர்மையானது.

கையால் தொட்ட பொருள் தன்னுடையதுஎன நினைப்பார்.

தான் வேலை செய்யும் கம்பனி தனக்கு வேண்டும்எனத் தோன்றும்.

அந்த எண்ணங்கட்குத் துணைப் போகக்கூடாது.

விலை பேசி நண்பருக்காக நிலம் வாங்கியவர் அது தனக்கு வேண்டும் என்றார்.

**சுயநலத்தின் சுயரூபம் கடூரமானது.**

கணவன், மனைவி, பெற்றோர், குரு, நண்பன், அண்ணன் என்பதால் சுயநலமிக்கு வேலை செய்து நஷ்டப்பட்டால், அத்துடன் விடாது.

அந்த நினைவு அழியும்வரை அது நம்மைச் சுடும்.

மனிதனால் தாங்க முடியாத அளவுக்குச் சுடும்.

யோகத்தை மேற்கொள்பவர்க்கு அது பயன்படும்.

குடும்பஸ்தனை அப்பழக்கம் அழித்துவிடும்.

தெரியாமலோ, வேறு வழியில்லாமலோ சுயநலத்திற்குச் சேவை செய்தால்

அது உயிரையே எடுத்துவிடும்.

யோகி அதைச் சுயநலமிக்குச் செய்தால் சுயநலமியின் உயிர் போகும்.

உலகில் கடுமையானது இரண்டு; கயமை, சுயநலம் என்கிறார் பகவான்.

எக்காரணத்தை முன்னிட்டும் அதற்குச் சேவை செய்வது தவறு.

அண்ணனுக்காகத் திருடலாமா?

அதைவிட மன்னிக்க முடியாத குற்றம் சுயநலத்திற்குச் சேவை.

நல்லதிற்கே சேவை செய்வதைவிட இறைவனுக்குச் செய்வது, சேவை செய்வது மேல்என்று கூறும்பொழுது சுயநலமிக்குச் சேவை செய்வது பாவம்; அறிவீனம்.

**53. முழுச்சுயநலமிக்கு முழுமையாக ஆதரவு கொடு.**

முன்கூறியதும், இதுவும் எதிரானவை. இரண்டும் உண்மை.

முழுச்சுயநலமிக்கு ஆதரவுகொடு என்றால் சுயநலம் நல்லதுஎனப் பொருளன்று.

நாம் சுயநலமியைத் தேடிப் போகவேண்டும் எனவும் பொருளில்லை.

**நம்மைத் தேடி சுயநலமி வந்தால் அது நம் சுயநலத்தின் பிரதிபலிப்பு என்பதை ஏற்க வேண்டும்**. இது ஸ்ரீ அரவிந்தத்தின் அடிப்படை.

அதுவும் தவிர்க்க முடியாத உறவானால், நாம் அதைத் தவிர்க்க முயலக் கூடாது.

தவிர்த்தால், உடனே அதைவிடப் பெரிய சுயநலமி வந்து சேருவான்.

யோகச் சட்டம் என்னவென்றால், நமக்கு அமைந்துள்ள சந்தர்ப்பத்தை நாம் ஏற்று அதன் அனுபவத்தைப் பெற்றால் அது நம்மை விட்டு முடிவாகப் போய்விடும்.

சுயநலமான தம்பி, பார்ட்னர், தம்பதியிருந்தால், அவர்கள் மாற விரும்பினால் அவர்கள் சுயநலம் பூதாகாரமாக வளரும்.

**எதிர்ப்பு வளர்க்கும்; ஏற்றால் அடங்கும்.**

இயல்பாக உள்ள சுயநலத்தை **எதிர்க்காமல் ஏற்பது** விரதம்.

எதிர்க்காமல் அமைதியாக ஏற்றால் குறைந்த காலத்தில் அது விலகும்.



சுயநலமி சீக்கிரம் விலக, அவன் சுயநலத்தை எரிச்சல்படாமல் அமைதியாக, இனிமையாக, இயல்பாக ஏற்க வேண்டும்.

அதற்குப் பொறுமை அதிகம் வேண்டும்.

அடுத்தவர் சுயநலத்தை ஏற்கிறோம் என்ற எண்ணம் அதை வளர்க்கும்.

**இது நம்சுயநலம் என்ற ஞானம் பொறுமை தரும்.**

பொறுமையால் நம்சுயநலம் சீக்கிரம் போகும் என்ற தெளிவு இனிமை தரும்.

முழுச் சுயநலமிக்கு முழுஆதரவு கொடுப்பது நம் முழுச் சுயநலத்தை விரைவாக விலக்குவதாகும்.

இது சுயநலத்திற்கு மட்டும் உரிய சட்டமன்று.

நமக்குத் தேவையான குணங்களை அனுபவத்தால் பெறும் சந்தர்ப்பங்களை வாழ்க்கையும், வாழ்க்கைமூலம் அன்னையும் வழங்குகின்றார்.

அது எரிச்சல், கசப்பு, விரக்தி; எதிர்ப்பு கொடுத்தால் அனுபவம் பெறத் தகுதியற்றவர் நாம் என்றாகும்.

இயல்பாக அமைந்த சந்தர்ப்பங்களை இயல்பாக, முடிந்தால் இனிமையாக ஏற்று, அமைதியாக அனுபவித்து, ஆர்ப்பாட்டமில்லாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

பெற்றோர், பிள்ளைகளுக்கு இது முக்கியம்.

இதன் பெருவிசேஷம் தம்பதி.

விவாகரத்து செய்பவர் அடுத்த தம்பதி அதேபோல் மேலும் மோசமாக இருப்பதைக் காண்கின்றனர். முதலில் ரத்து செய்த அதே தம்பதியை பல ஆண்டு கழித்து மீண்டும் மணப்பது பரவலான பழக்கம்.

வருவதை ஏற்று அனுப்புவது பக்குவம்.

**54. பெருமை தரும் அடக்கம் பெரியது.**

அறிவில்லாதவர் அடக்கமாக இருப்பது அடக்கமாகாது.

It is the vegetarianism of a toothless tiger.

அறிவுஎன ஏற்பட்டால், அது தன்னை வெளிப்படுத்தியபடியிருக்கும்.

ஒளியால் ஒளிந்துகொள்ள முடியாது. அது தானிருப்பதை வெளிப்படுத்தியபடியிருக்கும். இது ஒளியின் இயல்பு; அறிவும் அதைப்போன்றது.

அடக்கம் இயல்பன்று; நாகரீகம் வந்தபின் மனிதன் கற்றது.

வாழ்வு (existence) எனில் சக்தி சலனத்தால் செயல்படுவது.

மேட்டிலிருந்து நீர் பள்ளத்திற்குப் போவதைப்போல், தெளிவான அறிவு தெளிவில்லாதவரை நோக்கிப் போய்க்கொண்டிருப்பது இயல்பு.

மேட்டில் நீரைத் தேக்க முயல வேண்டும். தேக்கினால் அதற்கு சக்தி (power) உண்டு. தானே தண்ணீர் மேட்டில் சேராது.

மனம் அறிவின் சிறப்பை அறிந்து, அதை வெளிப்படுத்தாமலிருப்பது நாகரீகம்என உணர்ந்து, அறிவை வெளிப்படுத்தாமலிருப்பது அடக்கம்.

வெளிப்படும் அறிவு (sharp) காரமாக இருக்கும்.

பிறர் பொருளை அபகரிக்க (extortion) அது பெரும்பயன்படும்.

வறுமையுள்ள இடத்தில் அறிவு வன்முறையை நாடும்.

தானே அடக்கம் வாராது; முயன்று பெற வேண்டும்.

நாம் அடக்கமாக இருக்கிறோம்என அறியாத அளவுக்குள்ள அடக்கமே அடக்கம்.

பரம்பரைப் பணக்காரனுக்குத் தன்செல்வம் நினைவு வாராது.

பரம்பரையாகப் பிரபலமான அந்தஸ்துடையவர்க்கு அப்பெருமையிருக்காது.

தாம் அக்குடும்பத்தினர்என அறிமுகப்படுத்திக்கொள்ளத் தோன்றாது.

அளவுகடந்து படித்தவர்க்கு தம்படிப்பின் உயர்வு நினைவு வாராது.

தமிழ்நாட்டிலேயே தலைசிறந்த வைஷ்ணவ வித்வான், ஈடு வியாக்கியானத்தில் பாண்டித்யம் பெற்றவர் 50 ரூபாய் சம்பளத்தில் தமிழாசிரியராக இருந்தார். தம் பாண்டித்யத்தின் பெருமை அவர் அறியாதது. அது வெளிவந்தவுடன் அவரைப் பல்கலைக்கழகத்தில் உயர்ந்த பதவியில் அமர்த்தி 260/- ரூபாய் சம்பளம் கொடுத்தனர்.

**அடக்கம் அடக்கமானால் அது பெருமை தரும்.**

பட்டம் பெறாத படிப்பின் பெருமையை உலகம் அறியாது.

தானும் அதைப் பாராட்ட மறுத்தால் அதற்குரிய பெருமை தேடிவரும்.



அழகு, செல்வம், அந்தஸ்து, பிரபலம், உடல்வலிமை, பாண்டித்யம் போன்றவற்றைப் பெற்றவர் அதைப் பாராட்டாமலிருப்பதுண்டு; அது அரிது. தகப்பனார் பெயர் தமிழ்நாடு முழுவதும் தெரியும் என்றாலும் தன்னை அவர் மகன்எனக் கூறி அறிமுகப்படுத்தத் தோன்றாத அடக்கம் உண்மையான அடக்கம்.

## 55. எதைக் கெட்டியாகப் பிடித்திருக்கிறோமோ, அதை விட்டுக்கொடுக்க வேண்டும்.

குடும்பம், உத்தியோகம், பணம், நாணயம்என ஏதாவது ஒன்றை மனிதன் பலமாகப் பிடித்துக்கொண்டிருப்பான். அவன் உயிர் அதிலிருக்கும். அதுவே ஜீவநாடி. அது போனால் எல்லாம் போய்விடும். நண்பன், சீட்டு, ரேஸ், வைப்பாட்டி, கருமித்தனம், நடிப்பு, பொய்க் கதையைப் பொருத்தமாகச் சொல்லுதல், உரிமையற்ற சௌகரியத்தை முழுமையாக அனுபவிப்பது, மந்திரத்திலுள்ள நம்பிக்கை, தெய்வபக்தி, பிரார்த்தனை, விருந்தினரை உபசாரம் செய்வது, வேலையைப் பவித்திரமாகச் செய்வது, உயர்ந்த தமிழ்ச் (phrases) சொற்களை உருவாக்குவது, கதை படிப்பது, TV பார்ப்பது, பேரக்குழந்தையைப் பேணுவது, தாயார்சொல்லைத் தலைமேல் ஏற்பது, மனைவிசொல்லைத் தட்டாதது, கட்சி, கொள்கை என வாழ்வில் பல உண்டு. உயிர் போனாலும் மெய் சொல்லத் தவறுவதில்லை, உயிரைக் கொடுத்தாலும் ஒரு மெய் சொல்லக் கூடாது என்ற தீர்மானம் ஆகியவற்றுள் ஒன்றை மனிதன் ஆணித்தரமாய்ப் பிடித்திருப்பது வழக்கம்.

**அன்னையை அணுக இவற்றுள் எதுவும் தடை.**

மெய் உயர்ந்தது; பொய் பொல்லாதது; மெய் அன்னையை அணுக உதவும்; பொய் தடைசெய்யும்; மெய்யும் அன்னையை அணுக ஓரளவுதான் உதவும்; 80 பங்கு, 90 பங்கும் உதவும்; 100 பங்கு அணுக அதுவும் பயன்படாது. மெய்யைக் கெட்டியாகப் பிடித்து 90 பங்கு அன்னையை அணுகியபின் கெட்டியாகப் பிடித்திருப்பது தடைஎனப் புரியும். மெய் நமக்கு இயல்பாக அமையவில்லை என்பதால் கெட்டியாகப் பிடித்திருக்கிறோம்என்பது உண்மை. நாம் மெய்யைக் கைவிட்டாலும், பிடித்துக்கொள்ளாவிட்டாலும், மெய் நம்மை விட்டகலவில்லை எனில்

நமது ஜீவியம் மெய்க்கு உரிய ஜீவியம்எனப் பொருள்.

- ❀ அதனால் பிடித்திருப்பது, பிடி தடை.
- ❀ எந்த நல்லதும் இயல்பாக அமைவது சரி.
- ❀ மெய்யும் அதற்கு விலக்கன்று.
- ❀ நாம் சரணாகதியை ஏற்றால், மனம் அதில் மட்டுமிருந்தால் அன்னையை அடைவோம்.
- ❀ நாம் அன்னையை அடைந்தபின், அன்னை நம்மை ஏற்று, நம்மைப் பிடித்துக் கொள்கிறார்.
- ❀ அது பேரருள்.
- ❀ அதுவும் அன்னையாவதாகாது.
- ❀ அன்னையாக நாமே மாற சரணாகதியும் தடை; இரண்டறக் கலப்பதும் ஓரளவு தடை; அன்னையே மறந்துபோவது நாம் அன்னையானதற்கு அறிகுறி.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மாவுக்கு அருளை அடையாளம் தெரியும் என்பதால் அருள் புரியும் நேரம், ஆன்மா வெளிப்படும் நேரமாகும். வெளிவரும் ஆன்மா, சைத்தியப்புருஷன். ஜீவாத்மாவால் மேலே வரமுடியாது.

***அருள் செயல்படும் நேரம் ஆன்மா வெளிப்படும் நேரம்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# ஆகஸ்ட் 15

ஆகஸ்ட் 15, பிப்ரவரி 21 ஆகிய தேதிகள் அன்பர்கட்குப் புனிதமானவை. பகவான் பிறப்பதற்கு 100 அல்லது 200 ஆண்டுகட்குமுன் அத்தேதியில் நடந்த நிகழ்ச்சிகள், பின் வரப்போகும் புனிதத்தின் முத்திரையைத் தாங்கி வருவதைக் காணலாம். சர். வால்டர் ஸ்காட் ஆகஸ்ட் 15, 1771இல் பிறந்தவர். தலைசிறந்த நாவலாசிரியரானார். எவரும் எழுத்துமூலம் சம்பாதிக்காத பெரும் தொகைகளை ஈட்டினார். பகவான் யோகம் உலகத்திற்குப் பொறுப்பேற்கிறது; பிரபஞ்சத்தையும் தன் பொறுப்பில் கொண்டுவருகிறது. சர்க்காரில் ஓர் இலாக்காவில் எந்த ஊழியர் தவறு இழைத்தாலும் அப்பொறுப்பை மந்திரி ஏற்கிறார். லால் பகதூர் சாஸ்திரி இரயில்வே மந்திரியானபொழுது அரியலூரில் இரயில் ஆற்றில் விழுந்ததால், இராஜினாமா செய்தார். இதை சட்டப் பொறுப்பு constitutional responsibility என்பர். நம்மைச் சார்ந்தவர் எவர் செய்த தவற்றுக்கும் பொறுப்பேற்று குறையை நிறையாக்குவது பூரணயோகம். அதை நான் ஜீவியத்தின் பொறுப்பு consciousness responsibility என்பதுண்டு. சர். வால்டர் ஸ்காட் தன்னுடனிருந்த publishers பதிப்பகத்தார் சிலர் ஏற்படுத்திய கடன்கட்குப் பொறுப்பேற்று தம் பெருஞ் செல்வத்தை இழந்தார். 55ஆம் வயதில் இரவு பகலாக உழைத்து அந்த ஸ்தாபனங்களை நஷ்டத்தில் இருந்து மீட்டு இலாபத்திற்குக் கொண்டுவந்தார். அவர் ஏற்ற கடன் பாரம் பெரியது. அவர் மரணத்திற்குப்பின் அவருடைய இன்ஷுரன்ஸ்மூலம் மீதி கடன்களை - அவர் பெறாத கடன்களை - வக்கீல்கள் அடைத்தனர். அவருடைய நாணயம் காப்பாற்றப்பட்டது.

- ✡ **கடவுள்கள் பெயரை ஏற்றவர்கட்கு கடவுள்கள் அம்சம் அந்த அளவில் தவறாது வரும்.**
- ✡ **ஒருவர் மோட்சம் பெற்றால் முந்தைய 21 தலைமுறைகள் அந்த ஆன்மீகப் பலன் பெறுவர் என்பது மரபு.**

❀❀❀

# கம்பளம் பேசுகிறது

எகிப்து அரசன் சாலமன் விலங்குகள் பாஷையை அறிவார். தேங்காய் மட்டையும், புதுக்கம்பளமும் அன்னையுடன் பேசின. நாம் வாக்கியமாகப் பேசுகிறோம். நாகரீகம் வருமுன் மனிதன் சொல்லால் பேசினான். 'வா', 'போ' என்பதே பேச்சு. தலையை ஆட்டுவது பேச்சு. பேச்சு சப்தமாக எழுமுன் உணர்ச்சியாக இருந்தது. மரம் சூரிய ஒளியை நாடி வளைகிறது. வேர் நீரூற்றைத் தேடிப் போகிறது. வேருக்குச் செய்தி சொல்லாகவோ, ஒலியாகவோ போவதில்லை; உணர்ச்சியாகப் போகிறது. உணர்ச்சியான செய்தி விலங்குகளிடம் பரவுவதுபோல் தெய்வங்களிடமும் பரவுகின்றது. விலங்கு உணர்ச்சி உடலுணர்ச்சி. உடலுக்கும் உயிருக்கும் உள்ள உணர்ச்சி ஆத்மாவுக்கும் உண்டு. விலங்கு உடலால் செய்வதை, தெய்வம் ஆத்மாவால் சாதிக்கிறது.

- ✡ *அசைவு செயலாகிறது; சொல்லாகிறது.*
- ✡ *உள்ளே அசைவு தெரியுமானால், ஆத்மாவின் அசைவு தெரியும்.*
- ✡ *உள்ளே தெரியும் ஆத்மாவின் அசைவுக்கு கம்பளத்தின் கண்ணுக்குத் தெரியாத அசைவு தெரியும்.*
- ✡ *தேங்காய் முற்றியுள்ளதை மரத்தைத் தட்டிப்பார்த்துச் சொல்பவர் உண்டு. முற்றிய தேங்காயின் குரல் மரத்தில் வெண்கலமாக ஒலிக்கும்.*
- ✡ *ஜடப்பொருளுக்கும் குரல் உண்டு.*
- ✡ *ஆத்மா விழிப்பானால், கம்பளத்துடன் ஒன்றிய நேரம் கம்பளத்தின் குரல் கேட்கும். காததூரம் தள்ளியும் கேட்கும்.*

❀❀❀